
விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
பக்கங்கள்: பதினாறு
Valampurii
சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 18 சனிக்கிழமை (02.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 14

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து


# ஜனாதிபதி வேட்பாளர் பொன்சேகா இன்று யாழ்ப்பாணத்தில் பிரசாரம்


சரத்பொன்சேகா

## கட்சி அலுவலகத்தையும் திறக்கிறார்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தனது தேர்தல் பிரசாரத்தை இன்று யாழ்ப்பாணத்தில் மேற்கொள்கிறார். இவரது வருகையையொட்டி சில இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை யாழ். மானிப்பாய் வீதியில் சரத் பொன்சேகாவின் அலுவலகமும் இன்று திறந்து வைக்கப்படுகிறது. (16ஆம் பக்கம் பார்க்க)


ரணில்விக்கிரமசிங்க


மனோ கணேசன்

## உதவிகளை மறுக்கும் இலங்கையர்கள்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பாலத்தின் கீழ் வசித்து வரும் இலங்கையர்கள் சவுதியில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தால் வழங்கப்படும் உதவிகளை பெறுவதை மறுத்து வருவதாக சவுதி அரேபியாவின் இலங்கைத் தூதுவரகத்தின் முன்னாள் பணிப்பாளர் அப்துல் லஜித் முகமட் லாபீர் தெரிவித்துள்ளார்.

இப்பாலத்திற்கடியில் தங்கியுள்ளவர்களில் இலங் (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் தேர்தலை புறக்கணித்தால் பேரினவாதம் வெற்றிபெற்றுவிடும்

### விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணித்தாலோ அல்லது பிரதான இருவேட்பாளர்களை ஆதரித்தாலோ சிங்கள பேரினவாதம் வெற்றி பெற்றுவிடும் என ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். நேற்று பஸ்தியான் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், யுத்த களத்தில் இருந்து வெளியேறி தமிழ் மக்களின் உரிமைகளை (02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் ஐ.தே.மு. இரகசிய ஒப்பந்தம்?


(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் போட்டியிடும் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஐக்கிய தேசிய முன்னணியும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் எனினும் இது (16ஆம் பக்கம் பார்க்க)


## மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் நேற்றுக் காலமானார்



(கொழும்பு)

சமூக அநீதி ஒழிப்புத்துறை அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெரியசாமி சந்திரசேகரன் நேற்று அதிகாலை மாரடைப்பால் காலமானார்.

52 வயதான இவருக்கு நேற்று அதிகாலை மாரடைப்பு ஏற்பட்டதை தொடர்ந்து அவர் உடனடியாக கொழும்பு நவலோக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. (16ஆம் பக்கம் பார்க்க)



## பயங்கரவாதம் தலைதூக்காமல் இருக்க தமிழர்களுக்கு நிரந்தர தீர்வு அவசியம்!

### ரணில் விக்கிரமசிங்க விசேட அறிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதம் தலைதூக்காமல் இருக்க தமிழ் பேசும் மக்களின் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத்தீர்வு காணப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவர் நேற்று வெளியிட்ட விஷேட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

**நாளைமுதல்...**

நீங்கள் எதிர்பார்த்த...
ஜோதிடகலாமணி
சிவல்புரி சிங்காரம்
எழுதும்
2010 உங்களுக்கு எப்படி?

ஆட்சி மாற்றத்திற்கு வழி காண்போம்
எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க
ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன்
டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன
ஆகியோர்
பொது வேட்பாளர் சரத் பொன்சேகா உடன்
யாழ்.மாவட்ட மக்களை 02.01.2010 சனிக்கிழமை இன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு சந்திக்கவுள்ளனர்.
அனைவரும் வருக!
ஆட்சி மாற்றத்தை காண்க!

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணாமல் போனோரின் உறவுகளை மனோ எம்.பி இன்று சந்திக்கிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களை மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பில் பாதிப்புக்கள் குறித்து விரிவாக கேட்டறியப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு மன்னார் பொது விளையாட்டரங்கிலும், அதேதினம் மாலை 03.00மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்திலும் இச்சந்திப்புகள் இடம்பெறும் என ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஒளி விழா

(பொன்னாலை)

காவேரி கலா மன்றத்தின் ஒளிவிழா இன்று சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு மூளாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை வளாகத்தில் கழகத்தின் தலைவர் கி.புஷ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ பிரதம விருந்தினராகவும், வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் எஸ்.புத்திசிகாமணி, வலி.மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி நிருபா காசிநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொல்புரம் கலைக்கலாமன்றத்தினர் வழங்கும் சத்தியவான் சாவித்திரி, கிறிஸ்தவ இன்னிசை கீதங்கள், கிறிஸ்தவ பஜனை, கழக உறுப்பினர்கள் வழங்கும் கலை நிகழ்வுகள் ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (ச-49)


## விற்பனைக்கு

வேம்படி மகளிர் கல்லூரி வீதி நீதிமன்றம் அருகில் 4 பரப்பு காணியும் இந்து ஆரம்பபாடசாலைக்கு அண்மையில் வீடு வளவும், கோயில் வீதி முருகேசர் லேன், பிரம்பி லேன், பருத்தித்துறை வீதி, வேறு புதிய வீடும் விற்பனைக்கு உண்டு. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். வேறு தரகர் தேவை இல்லை.

தொடர்பு-சுந்தரம்
T.P.222 9171 (182)


# மண்டைதீவுக்குச் செல்ல அனைவருக்கும் அனுமதி

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக்கு பதிவுகள் எதுவுமின்றி அனைவரும் செல்வதற்கு நேற்றுமுதல் கடற்படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டில் இருந்து மண்டைதீவு உயர் பாதுகாப்பு வலயமாகப் பாதுகாப்புத் தரப்பினரால் அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் மண்டைதீவுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

2002ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பின்னர் மண்டைதீவுக் கடற்படையின் மக்களின் தொடர்பு அதிகாரியிடம் முன் அனுமதி பெற்றுச் செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்றிலிருந்து பதிவுகள் சோதனைகள் என்பன இன்றி அனைவரும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மண்டைதீவு துறைமுக வீதியும் மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை நெடுந்தீவுக்கும் பதிவுகள் எதுவுமின்றி செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. (ச)

# தமிழர்கள் தேர்தலை...

கொடுப்பதாக நாடகமாடி யுத்த வெற்றியாளர்கள் யார் என்பதை நிரூபிக்க இத்தேர்தலில் போட்டியிடுகின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜெனரல் சரத் பொன்சேகா இருவரையும் முதல் சுற்றிலே தோல்வியடையச் செய்ய வேண்டும். தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை பெறுவதற்காக இரு பிரதான வேட்பாளர்களும் தமது போலிக் கூத்தை காட்ட முயல்கின்றனர்.

தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களில் பெரும்பான்மையானோர் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டு சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட நிலையில் அரசாங்கம் ஓர் பிரகடனத்தை விடுத்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற் காக பதிவு செய்து கொள்ளலாம். அதற்கான வசதிகள் செய்து தரப்படும் என அந்த பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

உறவுகளை இழந்து சொத்துக்களை இழந்து பரிதவித்து நிற்கும் நிலையில் அவர்கள் எவராலும் தேர்தலில் வாக்களிக்கும் மனோ நிலை இல்லை.

இந்த நிலையில் தமிழ் மக்கள் இவ் தேர்தலில் அவதானமாக சிந்தித்து செயற்பட வேண்டிய நிலை உள்ளது.

போரில் விடுதலைப் புலிகள் தோல்வியடைந்துள்ளார்கள். இவ் தோல்வியானது வெறுமனே தமிழ் மக்களின் உடைய தோல்வியானது மாத்திரமல்ல, இந்த நாட்டில் உள்ள முற்போக்கு சத்திகளின் உடைய தோல்வி என்பதை நாங்கள் மறந்துவிட முடியாது.

போர் முடிபுற்றதாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட போது தென்னிலங்கையில் பலர் கொண்டாட்டங்களை நடத்தினார்கள். ஆனால் இது விடுதலைப் புலிகளுக்கு மட்டும் ஏற்பட்ட தோல்வி அல்ல. ஒரு சாகித்திய முறையிலான அடக்கு முறை ஆட்சி உருவாக்கக் கூடிய சூழ் நிலைதான் எதிர்காலத்தில் உருவாகக் கூடிய சூழ் நிலை ஏற்படும் என எல்லாமட்டங்களிலும் தெரியும்.

மகிந்த ராஜபக்ஷவும் சரத் பொன்சேகாவும் இந்த போரில் வெற்றிகுறித்து மகிழ்ச்சியடைந்தார்கள் அந்தவேளையில் தமிழ் இளைஞர், யுவதிகள் தமது உரிமை போராட்டத்திற்கு உலக மகா சக்திகளின் உதவிகள் இன்றி தமது வளங்களையும் ஆற்றலையும் பயன்படுத்தி இந்த போரை நடத்தி பல்லாயிரக்கணக்கான உயிர்களை தமது மண்ணுக்காக தியாகம் செய்தார்கள். இந்த நிலையில் இறுதிக்கட்ட யுத்தத்தில் வெள்ளைக் கொடிகளுடன் சரணடையவந்த புலிகளையும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களையும் சர்வதேச வல்லாதிக்க சத்திகளுடன் இணைந்து இவ்விரு வேட்பாளர்களும் தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறையை ஏற்படுத்தியுள்ளார்கள்.

போரின் முடிபின் பின்பு தமிழ் மக்கள் மாத்திரம் பாதிப்படையவில்லை. நாட்டின் பொருளாதாரமும் பாதிப்படைந்துள்ளது. பெற்றோலியத் தொழில் சார் ஊழியர்கள், தோட்டத் தொழிலாளர்கள், மின்சார சபை ஊழியர்கள், வேலையில்லாப்பட்டதாரிகள் என்பனவர்கள் தமது உரிமைக்காக வீதிகளில் இறங்கிப் போராடுகின்றனர்.

இவ்வேளையில் நாட்டினுடைய தொழிலாளர் வர்க்கமும் இடது சாரிகளும் ஏனைய முற்போக்குச் சக்திகளும் இன்று ஒன்றிணைந்து நிற்கிறார்கள். இந்த ஒன்றிணை வின் மூலமாக இடது சாரி முன்னணி ஊடாக மகிந்தவையும் சரத் பொன் சேகாவையும் தோல்வியுறச்செய்ய ஒருங்கிணைந்துள்ளார்கள். இவர்களில் எவர் வந்தாலும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் மழுங்களிக்கப்படவேண்டும். எனவே தமிழ் பேசும் மக்கள் இடது சாரி முன்னணிக்கோ தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்துக்கோ வாக்களிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இவ் பத்திரிகையாளர் சந்திப்பில் ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்க்மும் கலந்து கொண்டார். (ச-7)


## விசேட அறிவித்தல்

மைக்கல் மியூசிக் நிறுவனம் இன்று (02.01.2010) மாலை 6.00 மணிக்கு நடாத்தவிருந்த தென்னிந்திய நட்சத்திரங்கள் கலந்து கொள்ளும் இசை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர் வரும் 09.01.2010 அன்று நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

இறுதிநேர சனநெருக்கடியைத்தவிர்த்துக்கொள்வதற்காக நிகழ்வன்று நுழைவாயிலில் ரிக்கேற் எதுவும் விற்க வேண்டாம் என வேண்டு கோள் விடுக்கப்பட்டதால் ரசிகர்களை முன் கூட்டியே ரிக்கேற்றுக்களைபெற்றுக்கொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கிறோம்.

ரிக்கேற்றுக்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள்:-
பூபாலசிங்கம் புத்தகசாலை,
அன்னை புத்தகசாலை
நன்றி. (183)



## SUBRA (14)

சித்தன்கேணி வட்டுக்கோட்டை

இரு இடங்களிலும் 05.01.2010 இல் மாலை 4.30 A/L 2012

❖ 2009 A/L 7 மாணவர்கள் 3A பெறுபேறு. 49 மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதி

❖ நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம்.

தரம் 1 முதல் O/L வரை புதிய பிரிவு II ஆரம்பம் (தமிழ், ஆங்கில மொழி மூலம்) 05.01.2010 மாலை 4.30

(173)


# கிணற்றிலிருந்து சடலங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மற்றும் அராலிப் பகுதியில் கிணற்றிலிருந்து நேற்று இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அராலி தெற்கில் இலட்சுமணன் அம்பிகா (வயது 23) என்ற யுவதியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதேவேளை கோப்பாய் மத்தியில் அந்தோனிப்பிள்ளை ஜேசுராஜா (வயது 58) என்பவரின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரின் சடலங்களும் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. இதே வேளை வடமராட்சியில் இரண்டு சடலங்களும், மாதகலில் ஒரு சடலமும் கிணற்றிலிருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## மரண அறிவித்தல்

### திருமதி யோசப்பின் சூசன் சூசைப்பிள்ளை



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோசப்பின் சூசன் சூசைப்பிள்ளை நேற்று (1.1.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறகறி சூசைப்பிள்ளையின் (ஓய்வுப் பெற்ற பிரதம இலிகிதர் (P.W.D.) அன்பு மனைவியும்,

காலஞ்சென்றவர்களான திரு.திருமதி லூக்காஸ்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு திரு மதி கிறகறி தம் பதியினரின் அன்பு மருமகளும், திருமதி Dr.பற்றிமா பிலோமினா (பொது வைத்தியசாலை கொழும்பு), கிறகறி, இமானுவேல் (U.K), வின்சன்றலூக்கஸ் (விவசாயத் திணைக் களம் யாழ்ப்பாணம்), மறினற் யூலியற் (U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயக்குமார் ஹென்ஸ்மன் (கணக்காளர்), லில்லி பெனடிற்றா, வனஜா (U.K), றோஸ் வத்சலா (ஆசிரியை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), அன்ரன் (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

'திரேசா வாசா'
பிரதானவீதி,
இளவாலை.

T.P. 0778051724
0213206122

தகவல்:- மகன்
சூ.வின்சன்ற் லூக்கஸ்
(உக்கு) (179)


## ஜெய்ராம் களஞ்சியம்

மொத்த விற்பனை நிலையம்

சில்லறை வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி

தரமான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை, அலுவலக உபகரணங்கள் மற்றும் அச்சக காகிதாதிகள்

விசேட கழிவு விலையில்

| | | |
|---|---|---|
| 2 கட்டு - 11/= | 4 கட்டு - 22/= | 6 கட்டு - 36/= |
| 3 கட்டு - 16.50/= | 5 கட்டு - 27.50/= | 3 கட்டு C.R 37.50/= |

92, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் முன்பாக

# இன்று ஒரு தகவல்

## ஆட்சித்தலைவர்

அரேபிய நாட்டின் ஆட்சித்தலைவர் (கலீபா) ஒருநாள் வீதியால் நடந்து போய்க்கொண்டிருந்தார். தோளில் ஒரு பெரிய துணி மூட்டையுடன் கடைத் தெருவை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவரை வழியில் சந்தித்தார் உமர். "கலீபா அவர்களே ! எங்கே புறப்பட்டு விட்டீர்கள்?" என்று கேட்டார்.

"நான் துணி வணிகம் செய்பவன் அதனால் துணி வியா பாரம் செய்வதற்காகப் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றார்.

"நீங்கள் இப்பொழுது இந்த நாட்டின் ஆட்சித்தலைவர். நீங்கள் வியாபாரம் செய்யப் போய்விட்டால் அரசுப் பணிகளை யார் செய்வது?" என்று கேட்டார்.

"நான் அரசுப்பணிகளை மட்டும் செய்து கொண்டிருந்தால் எனது குடும்பத்தை காப்பாற்றுவது யார்? " என்று கேட்டாராம் அவர்.

இப்படி கேட்டவர் யார் தெரியுமா?

அவர் தான் அபூபக்கர். இறைதூதர் முகம்மத்திற்குப் பின் கலிபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். அப்பொழுது ஆட்சித் தலைவர்களுக்கு சம்பளம் என்று எதுவும் கிடையாது.

இந்தப்பிரச்சினையை எப்படித் தீர்ப்பது? என்று உமர் யோசித்தார்.

பொது நிதிக் கருவூலத்தின் பொறுப்பாளர் அபூ உபைதாவிடம் அழைத்துச் சென்றார்.

அவரிடம் பிரச்சினையைக் கூறினார்.

''ஆட்சித்தலைவருக்கு பொது நிதியில் இருந்து ஊதியம் அளிக்க முடியுமா?" என்று கேட்டார்.

"பொது நிதி விதிகளின் படி அதற்குச் சாத்தியமில்லை" என்று சொல்லிவிட்டார் அவர்.

"சரி வேறு ஏதாவது வழி இருக்கிறதா?" என்று கேட்டார் உமர்.

அபூ உபைதா சிறிது நேரம் யோசித்துவிட்டு,

''மக்காவிலிருந்து மதீனாவுக்கு குடிபெயர்ந்து வந்த அகதிகளுக்கு நிதி உதவி அளிக்க விதிகளில் இடமிருக்கிறது. அப்படிப் பார்த்தால் அபூ பக்கரும் அகதி தானே! அதனால் எல்லா அகதிகளுக்கும் கொடுப்பது போல் அவருக்கும் ஒரு தொகை அளிக்கலாம்" என்றார்.

கலீபாவான அபூபக்கருக்கு இந்த அகதி உதவித் தொகை யைத் தான் கொடுத்துக் கொண்டு வந்தார்களாம்.

குடும்பச் செலவுக்கு அதுபோதுமானதாக இருக்கவில்லை. இருந்தாலும் கலீபா என்பதற்காக மற்ற அகதிகளை விட அதிகமான தொகையைப் பெற அவர் விரும்பவில்லை.

மார்புப் பக்கம் கிழிந்திருந்த ஒரு மேலாடையைத் தான் அவர் அணிந்திருந்தார்.

அவருடைய மனைவியான அஸ்மா ஒருநாள் "தேன் அருந்த ஆசையாக இருக்கிறது" என்றாராம்.

"நமக்குக் கிடைக்கிற ஊதியம் குடும்பச் செலவுக்கே போதாது. இந்த நிலையில் தேன் வாங்க நான் எங்கே போவேன்" என்றார் அவர்.

சிறிது நாட்களின் பின் அவர் ஒரு தொகையைக் கொடுத்து தேன் வாங்கி வரச் சொன்னாராம்.

இவருக்கு ஆச்சரியம்!

"ஏது இந்தப் பணம்?" என்றார்.

"நீங்க தினமும் குடும்பச் செலவுக்காக கொடுத்து வந்த பணத்தில் சிறிது மிச்சப்படுத்தி வைத்தேன்" என்றார்.

அபூ பக்கர் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு நேராக பொது நிதி கருவூலப் பொறுப்பாளரிடம் போனார்.

"இந்தப் பணத்தை பொது நிதியில் சேர்த்துவிடுங்கள். இது எனக்கு அதிகப்படியாக தரப்பட்டு வந்த ஊதியம். அடுத்த மாதத்திலிருந்து இந்தத் தொகையைக் குறைத்துவிடுங்கள்" என்றார்.

"பசியைத் தணிக்கத் தேவையான அளவு உணவு, ஒருசோடி உடை, இதைத்தவிர மக்கள் பொது நிதித் தொகையிலிருந்து பெற என் குடும்பத்தாருக்கு உரிமை இல்லை." என்று கண்டிப்பாக சொல்லிவிட்டாராம்.

அவர் வாங்கிக் கொண்டு வந்த ஊதியம் கூட அவருடைய மனதை உறுத்திக்கொண்டு இருந்ததாம்.

கடைசி நேரத்தில் அவர் தனது மகள் ஆயிஷாவை அழைத்து, "மகளே! இதுவரையில் பொது நிதியிலிருந்து நான் பெற்றுவந்த தொகை என் இதயத்தில் பாரமாக அழுத்துகிறது. என்னுடைய தோட்டத்தை விற்று அதில் வரும் பணத்தில் இருந்து நான் இதுவரைக்கும் பெற்றுவந்த ஊதியத் தொகையை கணக்கிட்டு பொது நிதியில் சேர்த்துவிடு" என்றார்.

பதவி ஏற்பதற்கு முன்னால் தம்மிடம் இருந்ததை விட இப்போது கூடுதலாக என்ன சொத்து இருக்கிறது என்று பார்த்தார்.

ஓர் ஒட்டகம், ஒரு கோப்பை, ஒரு பணியாள் இவற்றையும் அடுத்து கலீபாவாக வருபவரிடம் ஒப்படைத்து விடுங்கள் என்றார்.

அதேபோல் அடுத்து வந்த உமரிடம் ஒப்படைத்தார்கள். அப்பொழுது உமர் சொன்னாராம் .

"அபூ பக்கரே! இந்த முன்மாதிரியால் உங்களுக்குப்பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறவர்களை பெரும் நெருக்கடிக்கு ஆளாக்கிவிட்டீர்கள்" என்று சொல்லிக் கண்கலங்கினாராம்.

கடைசியாக அபூபக்கர் தம் குடும்பத்திற்கு விட்டுச் சென்ற சொத்து ஒரு படுக்கை விரிப்பு, ஒரு போர்வை அவ்வளவுதான்.

ஆட்சிப் பொறுப்புக்கு வருகின்றவர்கள் சிந்திக்கவேண்டிய ஒரு செய்தி இது.

ஓர் ஊரில் ஒரு மன்னர் இருந்தாராம்.

அமைச்சர் வந்து அவரிடம் "மன்னா! நம்முடைய ராஜ்ஜியத்தில் இனிமேல் இலஞ்ச ஊழலே இருக்காது" என்றாராம்.

"ஆகா! அப்படியானால் ஊழல் பேர் வழிகளையெல்லாம் நாடு கடத்தியாச்சா...?" என்று கேட்டர் மன்னர். இதற்கு அவர் "அப்படியில்லை... இனிமேல் கொடுப்பதற்கு சனங்களிடம் பணமே இல்லை! " என்றாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழில் இருந்து வன்னிக்கு வரும் அரச ஊழியர்களுக்கு இலவச பஸ்

## இம்மாதம் முதல் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னியில் கடமையாற்ற வரும் ஆசிரியர்கள்உள்ளிட்ட அரசஊழியர்களுக்காக இம்மாதம் முதல் திங்கள், வெள்ளிக் கிழமைகளில் இலவச பஸ் போக்குவரத்துச் சேவை நடத்தப்படவுள்ளது.

குறிப்பாக ஆசிரியர்களின் நலன் கருதி இந்த இலவச பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாணத்தின் கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

வன்னியில் உள்ள பாடசாலைகளி ல் கடமையாற்றிய ஆசிரியர்கள் யுத்தத்தின் காரணமாக யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாடசாலைகளுக்கு இணைக்கப்பட்டிருந்தனர். இவர்களின் இணைப்பு இம்மாதத்துடன் முடிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே இவர்கள் அனைவரையும் தாம் முன்பு கடமையாற்றிய வன்னிப் பாடசாலைகளுக்குக் கடமைக்குத் திரும்ப வேண்டுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு வருவதற்காக இலவச பஸ் சேவை நடாத்தப்படுகின்றது.

திங்கட்கிழமை யாழில் இருந்து வருவதற்கும் வெள்ளிக்கிழமை திரும்பிச் செல்வதற்கும் அரச ஊழியர்கள் இந்த இலவச பஸ் சேவையைப் பயன்படுத்த முடியும்.

அரச பணியாளர்கள் வெள்ளிக்கிழமை வரை வன்னிப் பகுதிகளில் தங்கியிருப்பதற்கான வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இளங்கோவன் கூறியு ள்ளதாகவும் வன்னிப் பாடசாலைகளில் கடமையாற்ற வேண்டிய சுமார் 650 ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (ஓ)

# உல்லாச பயணத்துறையை ஊக்குவிக்க யாழ்.நகரில் சுற்றுலா ஹோட்டல்

## தம்பிக்க பெரேரா தகவல்

யாழ். நகரில் 33 அறைகளைக் கொண்ட டில்கோ ஜஃப்னா சிட்டி ஹொட்டேல் என்ற சுற்றுலா ஹோட்டல் 2010 ஆம் ஆண்டு திறக்கப்படவுள்ளதாக முதலீட்டுச் சபையின் தலைவர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

சுமார் 80 மில்லியன் ரூபா முதலீட்டுடன் கட்டப்பட்டு வரும் இந்த ஹோட்டல் 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் திறக்கப்படவுள்ளதாகவும் இதன் பிரகாரம் கடற்கரையையும் கடலேரியையும் அண்டியுள்ள பகுதியில் சுமார் 340 பேர்ச்சஸ் பரப்பளவில் கட்டப்பட்டு வரும் இந்த விடுதி வெளிநாடுகளில் வாழும் இலங்கையர் வர்த்தக சமூகத்தினர் மற்றும் சுற்றுலாப் பயணிகளை கவரும் விதத்தில் சகல வசதிகளையும் கொண்டதாக அமையவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக இலங்கை முதலீட்டு சபையில் இதற்கான ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்தாகியுள்ளது. முதலீட்டுச் சபையின் தலைவர் தம்மிக்க பெரேராவும் டில்கோ நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் தவராஜா திலகராஜாவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

வீரசிங்கம் மண்டபத்தை அண்மித்ததாக கட்டப்பட்டு வரும் டில்கோ ஜப்னா சிட்டி ஹோட்டல் திறக்கப்பட்டதும் மேலும் உல்லாசப் பயணத்துறை சார்ந்த ஹோட்டல்களுக்கான முதலீடுகள் செய்யப்படவுள்ளன என்றும் தம்மிக்க பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# வட. ஐக்கிய ஆசிரியர் சங்கம் முக்கிய கூட்டம் நாளை இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரடியாகச் சந்தித்து வடமாகாண ஆசிரியர்களின் பிரச்சினைகளை சமர்ப்பிப்பது தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இது தொடர்பாக ஆசிரியர்களின் விபரங்களை திரட்டும் வகையில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு சிறப்புக் கூட்டம் ஒன்றை ஆரியகுளம் உயர்கல்வி நிறுவனத்தில் ஒழுங்கு செய்துள் ளது.

வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் சங்கத்தில் இணையவுள்ளோர் கூட்டத்திற்கு சமூகம் தந்து தமது தனிப்பட்ட விண்ணப்பக் கடிதங்களையும் தாம் நேரடியாக ஜனாதிபதியை சந்திக்கும் தங்கள் விருப்பத்தையும் எழுத்து மூலம் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அன்றைய கூட்டத்தில் தற்காலிக இணைப்பு பெற்ற ஆசிரியர் களின் தற்காலிக இணைப்பு இரத்து செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக சங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்படும்.

எனவே வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கத்தின் சகல பிரதிநிதிகளும் கூட்டத்தின் அவசிய தேவை கருதி கலந்து கொள்ளுமாறு சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இவ் ஆசிரியர் சங்கம் அரசியல் சார்பற்றது என்பதை வெளிப்படுத்துவதோடு உதவ முன்வரும் எந்த தரப்பினரையும் அது ஏற்றுக்கொள்ளும் என்பதையும் சங்கம் தெரியப்படுத்தியுள்ளது. (ந)

# இராசி பலன்

02-01-2010
(மார்கழி 18 சனிக்கிழமை)
துதியை முன்னிரவு 9.31 மணிவரை
புனர்பூசம் காலை 6.56 மணிவரை
பூசம் பின்னிரவு 5.17 மணிவரை
இராகுகாலம் 9.30-11.00 மணிவரை
சுபநேரம் 3.30-5.00 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், ரோக நிலை, கடினமுயற்சி, கல்வியில் ஆர்வம் |
| இடபம் | கூட்டு முயற்சி, சுவாரஸ்யம், தனலாபம், உறவினர் சந்திப்பு |
| மிதுனம் | அதிக செலவு, விவாதம், வேலைச் சுமை, எடுத்தகாரியம் தாமதமாகும். |
| கடகம் | வெகுமானம் உறவினர் வருகை, தொழில் முன்னேற்றம், போசன சுகம். |
| சிங்கம் | காரிய அலைச்சல், குடும்பக் கவலை, சுபசெலவு, உடல்நலக் குறைவு. |
| கன்னி | தனதானிய சேர்க்கை, சயனசுகம், குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை. |
| துலாம் | தூரதேசச் செய்தி, முயற்சி கைகூடும், உடல்நலம், கௌரவமான நிலை |
| விருச்சிகம் | எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு, வீண்பயம், பிரயாணம். |
| தனுசு | பொருள் விரயம், மனக்கவலை, உஷ்ணவியாதி,முயற்சி தாமதம். |
| மகரம் | அபூர்வ சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், தேகநலன். |
| கும்பம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, போசனசுகம், நல்ல செய்தி. |
| மீனம் | பணக்குறைவு, மனக்கவலை, உடல் நலக்குறைவு, முயற்சிதாதமம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 240 | 260 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 300 |
| தக்காளி | 180 | 200 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 120 | 140 | 100 |
| கரட் | 120 | 140 | 120 |
| பூசணி | 50 | 60 | 40 |
| புடோல் | 80 | 100 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 130 | 140 | 140 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 80 |
| பாகற்காய் | 240 | 280 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 50 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 200 | 220 | 150 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | -- | -- | -- |
| கறிமிளகாய் | 160 | 200 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 170 | 200 | 140 |
| கத்தரி தம்புள்ள | 170 | 140 | 160 |
| கீரை - 1 பிடி | 35 | 40 | 35 |
| தேசிக்காய் | 120 | 180 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 35 |

# தாய்(தமிழ்) மொழியில் கற்பதே

# சிந்தனை ஆற்றலைத் தூண்டும்



அமைதியான தோற்றம், அறிவின் அடக்கம், மென்மையான மொழிதல், நெற்றியில் நீறு இத்தனையும் ஒருங்கே அமைந்த தமிழகப் பேராசிரியர் எஸ். மோகன் அவர்களை யாழ்ப்பாணத்தில் சந்தித்தோம்.

தமிழக அறிஞர்களுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் சைவத்தமிழ் விழாக்களில் தமிழக அறிஞர்களின் பங்கேற்பே முக்கியத்துவம் பெறுவதாக இருக்கும்.

அந்தளவிற்கு தமிழக அறிஞர் பெருமக்களை யாழ்ப்பாண மண் விருப்போடு வரவேற்றதுண்டு. இருந்

## தமிழகத்தின் கல்வியியற் பேராசிரியர் எஸ்.மோகனுடன் செவ்வி

தும் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக தமிழகத்திற்கும், யாழ்ப்பாணத்திற்குமான உறவு எட்டி விட்டதென்ற கவலை இருக்கவே செய்கின்றது.

இலங்கைத் தீவு யுத்தமற்ற நாடாக இருந்திருக்குமாயின் தமிழகப் பேராசிரியர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாற்றி விட்டு அன்று மாலையே தங்கள் வீடு திரும்பி இருக்க முடியும்.

இதேபோல் இசை வல்லாளர்கள், சிற்ப விற்பனர்கள் என தமிழகத்தின் பல் துறைசார் ஆற்றல்கள் எங்கள் தமிழ் மண்ணிலும் விழுது விட்டிருக்கும்.

என் செய்வது? எழுதாவிதிக்கு அழும் நிலையில் இன்று யாழ்ப்பாண மக்கள் உள்ளனர்.

இருந்தும் ஏ-9 பாதை முழுமையாகத் திறக்கப்பட்டதன் முதல் வரவாக தமிழகத்திலிருந்து பேராசிரியர் எஸ்.மோகன் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தமை மனநிறைவைத் தருவதாகும்.

அவரின் யாழ்ப்பாண வருகையோடு தமிழகத்தின் பேராசிரியர்கள் இங்கு வருவதற்கான சாத்தியங்கள் உண்டென்ற நிறைவோடு அவரை சந்தித்தோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் அவர்களின் வீட்டில் தங்கியிருந்த பேராசிரியர் மோகன் அவர்களை சந்தித்ததில் பெருமகிழ்ச்சி.

அவரின் ஆழமான-தெளிவான கருத்துக்கள் எங்கள் கல்வி தொடர்பான மீள் மதிப்பீட்டிற்குப் பெருந்துணையாக அமையும் என்பதால் அவருடன் நடந்த நேர்காணலின் தொகுப்பை இங்கு தருகின்றோம்.

கணித ஆசிரியர், மதுரைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர், தமிழ்நாடு அழகப்பா பல்கலைக்கழக கல்வியியற் பேராசிரியர், முன்னாள் பீடாதிபதி, தற்போது குன்றக்குடி அடிகளார் கல்வியியல் ஆய்வுமைய இயக்குநர், முதற்தர ஆய்வாளர் எனப் பல்துறை ஆளுமைமிக்க பேராசிரியர் எஸ். மோகன் அவர்கள், நூற்றுமுப்பது மாணவர்களின் கலாநிதிப் பட்டப் படிப்பின் பேராசிரியராக இருந்துள்ளமை அவரின் சான்றாண்மைச் சிறப்பிற்கு அணிகலனாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறை விரிவுரையாளர் கலாநிதி திருமதி அனுஷியா சத்திய சீலன் அவர்களின் கலாநிதிப் பட்டப் படிப்பின் வழிகாட்டல் பேராசிரியராக இருந்த இவர் அதன் ஊடாக இலங்கையின் கல்வி அமைப்புத் தொடர்பில் அறிவுப்புலம் மிக்கவராக இருப்பதை அவரின் தெளிந்த விளக்கங்கள் எடுத்துரைக்கின்றன.

### பயிற்சி பெறாத ஆசிரியர்களின் கற்பித்தலைத் தவிர்க்க வேண்டும்

இந்தியாவில் எந்த ஆசிரியரும் ஆசிரியப்பயிற்சி பெறாமல் வகுப்பறைக்குள் நுழைய முடியாது எனக் கூறும் பேராசிரியர்,

இலங்கையில் ஆசிரியர் நியமனம் கிடைத்த பின்பு ஆசிரியர் கலாசாலைகளிலோ அல்லது பட்டப்பின் கல்வி டிப்ளோமா தகைமைகளிலோ தேர்ச்சி பெறும் நிலை காணப்படுகின்றது.

ஆசிரியர் நியமனம் பெற்ற ஒருவர் குறைந்தது பத்து ஆண்டுகளுக்குப் பின் ஆசிரியப் பயிற்சித் தகைமை பெறுவதற்கான சந்தர்ப்பம் இருப்பதானது அவரின் பத்து ஆண்டு கல்விச் செயற்பாட்டின் காத்திரமான பணிக்கு பின்னடைவாகவே அமைகின்றதெனலாம்.

எனவே ஆசிரியர் நியமனம் பெறும் ஒருவர் ஆசிரியர் தொழிலுக்குரிய வாண்மையைப் பெற்றுக் கொண்டு வகுப்பறையில் மாணவர்களைச் சந்திக்கின்றபோது, அதனால் மாணவர்கள் பற்றிய புரிந்துணர்வை-இனங்காணலை-கற்பித்தல் முறைக்கான தெரிவை மேற்கொள்வது இலகுவாகின்றது.

ஆக, ஆசிரியர்கள் தமது சேவைக் காலத்தில்-ஓய்வுக்கு முன் ஆசிரிய வாண்மைக்கான பயிற்சியைப் பெறுதல் என்ற நிலையை மாற்றி ஆசிரியப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டு வகுப்பறையில் மாணவர்களை எதிர் கொள்வதென்ற நிலைக்கு மாற்றும் போது கல்வியின் இலக்கை அடைவதற்கு அது பேருதவியாக இருக்கும் என்பது அவரின் உறுதியான நம்பிக்கை.

### தாய்மொழிக் கற்றல்

தாய்மொழிக் கற்றல் தொடர்பில் பேராசிரியர் மோகன் அவர்களின் விளக்கம் எங்கள் பெற்றோர்களுக்கு மிகவும் உதவுவதாக அமைகின்றது.

பேராசிரியரைப் பொறுத்தவரை பிள்ளைகளின் கல்வி தாய் மொழியில் இருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

தாய் மொழியில் கற்கும் பிள்ளைகளின் அறிவுத்திறனும், சிந்தனைத் தூண்டலும் பன்மடங்கு உயர்வுடையதெனக் கூறும் பேராசிரியர், தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட பிள்ளைகள் தமிழில் கற்கும் போது கற்றலுக்கும் சிந்தனைக்குமான தொடர்பு மிகவும் நெருக்கமாக இருப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

அதேநேரம் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பிள்ளை ஆங்கில மொழியில் தனது ஆரம்பக் கல்வியை மேற்கொள்ளும் போது கற்றலைப் புரிந்து கொள்ளாமல் வெறுமனே மனனம் செய்ய பழகிக்கொள்கின்றது.

தமிழில் சிந்தித்து ஆங்கிலத்தில் எழுதும் போது நிறைய இடைவெளிகள் ஏற்பட்டு விடுகின்றன.

உண்மையில் சிந்திக்கக் கூடிய ஆற்றல் பரம்பரை மரபணு மூலமாகத் தீர்மானிக்கப்படுவதால், தாய் மொழியில் கல்வி கற்பதே சிறந்ததாகும்.

தாய்மொழியில் கல்வி கற்றல் என்பது ஆங்கில மொழியைக் கற்காமல் விடுதல் அல்லது ஆங்கில மொழியை எதிர்த்தல் எனப் பொருள்படமாட்டாது.

சர்வதேச மொழியாக இருக்கக் கூடிய ஆங்கிலத்தைத் தாய்மொழி வழிக்கற்றலுடன் சேர்த்துக் கற்பதே உகந்ததாகும் என்பது பேராசிரியர் மோகனின் ஆணித்தரமான முடிபு.


இதற்காகப் பல சான்றுகளை முன் வைக்கும் அவர், அறிவியலில் இன்று சாதனை படைத்து வரும் கொரியா, யப்பான், ஜேர்மனி, சீனா போன்ற நாடுகள் தாய்மொழியிலேயே தமது கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்கின்றன எனக் குறிப்பிடுகின்றார்.

தற்போது குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் தலைமையின் கீழ் இயங்கும் கல்வியியற் கல்லூரியில் (College of Education) பேராசிரியராக இருக்கும் மோகன் அவர்கள் தவத்திரு பொன்னம்பல அடிகளாரின் சமயப் பணிகளை எடுத்துரைத்தபோது உள்ளம் நெக்குருகியது.

குன்றக்குடி அடிகளாரின் தலைமையில் இயங்கும் கல்வியியற் கல்லூரியும் அதன் உயர்கல்வி ஆராய்ச்சி மையமும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தியில் ஆற்றும் பங்களிப்பு அற்புதமானவை.

உலகம் முழுவதும் இருக்கக் கூடிய அதி சிறந்த ஆராய்ச்சிகளைப் பயன்படுத்துவது இந்த அமைப்பின் உன்னதமாகக் காணப்படுகின்றது.

விஞ்ஞான, மருத்துவ ஆய்வின் அடிப்படையில் மூளையின் செயற்பாடுகளை உணர்ந்து ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை அதிகரித்தல் என்றவாறு நவீனத்துவ நோக்கில் தம் பணியை முன்னெடுக்கும் குன்றக்குடி அடிகளார், கல்வியியற் கல்லூரி எமக்கும் வழிகாட்டியாக இருப்பதற்குப் பேராசிரியரின் வருகையும் அவரின் கருத்துரையும் பேருதவியாக அமையும் என நம்பலாம்.



### யாழ்ப்பாணப் பண்பாட்டில் பெருமைப்படும் பேராசிரியர்

தமிழகத்தின் கல்வி முன்னேற்றம் கண்டு பிரமித்து நிற்கும் எங்களுக்குப் பேராசிரியர் மோகன் அவர்கள் குறிப்பிட்ட விடயங்கள் எங்கள் பெருமையை நாங்கள் அறியாமல் இருந்து விட்டோமோ என ஒரு கணம் எண்ணத் தோன்றியது.

## விஜயன்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆய்வுகளை உயர்வுபடுத்திக் கூறும் பேராசிரியர், யாழ்ப்பாணப் பாடசாலை கல்வி முழுத் தகுதியையும் வழங்குவதாகப் பெருமைப்படுத்தியுள்ளார்.

நல்லூர் முருகன் ஆலயம் உள்ளிட்ட பல ஆலயங்களைத் தரிசித்தேன். யாழ்ப்பாணத்தில் தெய்வீகமும் திருமுறைகளும் ஒன்றித்திருப்பது கண்டு பேருவகை அடைகின்றேன் எனப் பேராசிரியர் கூறியபோது எங்கள் கண்களும் நீண்ட காலத்தின் பின் ஆனந்தக் கண்ணீரைக் கண்ட மகிழ்வுடன் பேராசிரியரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நேற்று நடந்த கருத்தரங்கில் பேராசிரியர் எஸ். மோகன் உரையாற்றுகின்றார். நிகழ்வில் பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள் பங்கேற்றனர்.



# நாயக்கர் கலைப்பாணி


வானோங்கு மதுரைக் கோபுரங்கள்

### அஷ்டசக்தி மண்டபம்

மீனாக்ஷி அம்மன் கோயிலுக்கு நேராக அமைந்திருக்கும் அஷ்டசக்தி மண்டபம் இந்நாட்களிற் பிரதான நுழைவாயிலாகப் பயன்படுத்தப்படுகின்றது. அதன் முன்புறத்திலே அளவிற் பெரிதான கோபுரவாசல் அமைந்திருக்கின்றது. பக்கச் சுவர்களின் மேற்பகுதியில் விநாயகரதும் சண்முகரதும் படிமங்கள் காணப்படுகின்றன. மண்டபத்தில் இரண்டு தூண்வரிசைகள் அமைந்துள்ளன. முதலாவதாகவுள்ள தூண்களில் அஷ்டசக்திகளின் உருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் வரிசைத் தூண்களில் நாயக்க மன்னர் நால்வரின் பிரதிமைகள் காணப்படுகின்றன.

மண்டபத்தின் கூரை வில்வளைவான அமைப்புடையது. விதானத்திலே அம்மனுக்குரிய யந்திரங்கள் ஐந்தும், அவற்றைச் சுற்றி மலர் வடிவங்களும் வண்ண ஓவியங்களாக வரையப்பெற்றுள்ளன. இம் மண்டபத்தின் மேற்கெல்லையில் மகாகணபதி, சண்முகர் ஆகியோரின் படிமங்கள் உன்னதமான கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அஷ்டசக்தி மண்டபம் திருமலை நாயக்கரின் அந்தப்புரப் பெண்ணொருத்தியாற் கட்டப்பெற்றது என்பர்.

### மீனாக்ஷி நாயக்க மண்டபம்

வீர வசந்தராய மண்டபம் கிழக்குக் கோபுரத்தை ஒட்டி அமைந்திருக்கின்றது. அது அளவுப் பிரமாணங்களிற் புதுமண்டபத்தை ஒத்ததாகும். அதன் நடுவில் இடைவழியும், ஓரங்களில் சாலைகளும் அமைந்துள்ளன. வரிசைகளாக அமைந்துள்ள தூண்கள் கூட்டுத் தூண்களாகும். அவை பலவகையான வேலைப்பாடுகள் கொண்டவை.

அவை தாங்கி நிற்கும் கூரை நீளமான கற்பாளங்களினால் அமைக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பக்கத்திலுள்ள தூண்களில் உருத்திரன், உருத்திரகாளி, காலாதரமூர்த்தி முதலியோரின் உருவங்கள் தூண்களிற் செதுக்கப்பட்டுள்ளன.

விதானத்திலே தாமரை மலரும் நாட்டியக்காரரின் வடிவங்களும் கவர்ச்சி மிக்க கோலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. வீரவசந்தராய மண்டபம் திருமலை நாயக்கரின் சகோதரரான முத்து வீரப்ப நாயக்கனின் திருப்பணியானது என்று *திருப்பணி விவரம்* கூறும். அது சகவருடம் 1533 க்குச் சமமான கி.பி.1611 இலே கட்டி முடிக்கப் பெற்றது.

### முதலிப்பிள்ளை மண்டபம்

சித்திரகோபுரத்துக்கும் பொற்றாமரைக் குளத்தின் வடகிழக்கு மூலைக்கும் இடையில் அமைந்துள்ள முதலிப்பிள்ளை மண்டபம் வெளிச்சமின்றி இருட்டாயிருப்பதாற் கரிய மண்டபம் என்றுஞ் சொல்லப்படும். அதிலே சித்திர வேலைப்பாடுகள் அமைந்த பன்னிரண்டு தூண்கள் உள்ளன.

அவற்றிலே பிச்சாடனர், மோகினி என்போர் பற்றிய புராணக்கதை வடிவமான சிற்பங்கள் சிறப்பான முறையிலே செதுக்கப்பட்டுள்ளன. ஆறாவது தூணிலே அமைந்திருக்கும் சிற்பம் மண்டப ஸ்தாபகரின் கோலமானது என்று கருதலாம். சித்திர கோபுரத்தைக் கட்டிய குடந்தை முதலியார் இம் மண்டபத்தை அமைப்பித்தாரென்று *திருப்பணி விவரம்*, *திருப்பணி மாலை* என்பன குறிப்பிடுகின்றன.

### சேர்வைக்கார மண்டபம்

வீரவசந்தராய மண்டபம், மீனாக்ஷி நாயக்க மண்டபம் ஆகியவற்றிற்கு இடையிலமைந்த முற்றத்திலே நவீன கால அமைப்புகளான முத்துராம ஐயர் மண்டபம், கல்யாண சுந்தர முதலியார் மண்டபம், மீனாக்ஷி நாயக்க மண்டபம் ஆகியன அமைந்துள்ளன. அவை அளவிற் சிறியனவனாயினும் அழகிய வேலைப்பாடுகள் பொருந்தியனவாகக் காணப்படுகின்றன. தூணமைப்புக்களே அவற்றின் பிரதானமான சிறப்பம்சமாகும். அவற்றின் தூண்கள் உயரமானவையாகவும் மெலிந்த தோற்றத்துடனும் அமைந்துள்ளன. அவற்றின் பூமுனை பொருந்திய போதிகை வனப்புமிக்க கோலமானவை.


ஆதி வீதியிலும் அழகான சிறிய மண்டபங்கள் காணப்படுகின்றன. தென்கிழக்கு மூலையிற் காணப்படும் ஆறுமுகத்த முதலி மண்டபம் கி.பி.1760 ஆம் ஆண்டளவிலே கட்டப் பெற்றதாகும். வெங்கடேஸ்வர முதலியாரின் திருப்பணிகளான தென்மேற்கிலுள்ள திருமச்சிநாயக்க மண்டபம், வட கிழக்கிலுள்ள தட்டுச் சுற்று மண்டபம் என்பன குறிப்பிடத்தக்கவை. இங்குள்ளவை மண்டபங்களிற் காலத்தால் முற்பட்டது பெச்சக்கால் மண்டபம் என்பதாகும். அது கி.பி. 1658 ஆம் ஆண்டளவிலே பெச்சியக்கா என்னும் பெண்ணால் அமைப்பிக்கப் பெற்றது.

### கல்யாணமண்டபம்

கல்யாண மண்டபம் சுந்தரேஸ்வரர் கோயிலில் இரண்டாம் பிரகாரத்துக் கிழக்கு மதிலை ஒட்டி அமைந்திருக்கின்றது. அது அமைக்கப்பட்ட பொழுது சுவர்களின்றிக் காணப்பட்டது.

அதிலே தோரணங்கள் அமைந்துள்ளன. அதன் நடுவிலே கருமையான கற்றூண்கள் பொருந்திய பீடம் அமைந்துள்ளது. அதன் மேலான விதானம் மரத்தால் அமைக்கப்பட்டதாகும்.

அதில் உன்னதமான வேலைப்பாடுகள் உள்ளன. கல்யாண மண்டபம் விஜரங்க சொக்கநாத நாயக்கரால் அமைக்கப்பட்டது. வருடாந்த உற்சவமான மீனாக்ஷி சுந்த ரேஸ்வரர் திருக் கல்யாணம் அங்கு நடைபெறுவது வழமை. குண்டோதரனின் வடிவமொன்று அங்கு வைக்கப்பட்டுள்ளது.



### அன்னக்குழி மண்டபம்

மேலைக் கோபுரத்திற்கு மேற்கில் இம்மண்டபம் காணப்படுகின்றது. அது நான்கு சிறிய மண்டபங்கள் அடங்கிய தொகுதியாகும். அதன் முகப்பிலே நான்கு பெரிய யானைகளின் கல்லுருவங்கள் அமைந்துள்ளன. அவற்றைப் போன்ற உருவங்கள் சுந்தரேஸ்வரர் கோயிலின் இரண்டாம் பிரகாரத்திலுள்ள திருஞான சம்பந்தர் சந்நிதியிலுங் காணப் படுகின்றன. இங்குள்ள மூன்றாவது மண்டபத்தில் யாழித்தூண்கள் அமைந்துள்ளன. யாழி உருவங்கள் கட்டையானவை; மெலிந்த தோற்றங் கொண்டவை. அவை ஆயிரங்கால் மண்டபத்தில் உள்ளவற்றைப் போன்றனவாகும். தெற்கிலும் வடக்கிலும் அமைந்திருக்கும் நடுத்தூண்களிற் பிரமன், விஷ்ணு ஆகியோரின் வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் சி.பத்மநாதன்

நான்காவது மண்டபத்தில் அழகான வேலைப்பாடுகள் அமைந்துள்ள கூட்டுத் தூண்கள் உள்ளன. தெற்கில் உள்ள தூண்களிலே பாண்டியராசர், வியாக்கிரபாதர், சாமரை தாங்குபவர், பிரம்மா ஆகியோரின் வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அதேபோல வடக்கிலுள்ள தூண்களில் விஷ்ணு, பதஞ்சலி முனிவர், அரசி என்போரின் உருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இம் மண்டபத்தில் காணப்படும் சிற்பங்கள் கலைவனப்பில் உன்னதமானவை. அங்கலட்சணங்களையும் உணர்ச்சி பாவங் களையும் அணியலங்காரங்களையும் கலை ஞர் வெளிப்படுத்தியிருக்கும் கோலம் அற்புதமானது.

### கோபுரங்கள்

மதுரைக்கோபுரங்கள் வானோங்கு கோபுரங்கள். அவை நெடுநிலைக் கோபுரங்கள், அழகு மிகுந்தவை; வேலைப்பாட்டில் உன்னதமானவை; அவற்றிற்கு நிகரானவை வேறெங்கும் காணப்படுவதில்லை. பாண்டியர்கள் உருவாக்கிய தளங்களை அடிப்படையாகக் கொண்டு சில கோபுரங்கள் பிற்காலத்திலே கட்டப்பெற்றன.

93

வேறுசில பாண்டியர்களால் கட்டி முடிக்கப் பெற்றவை. மற்ற கோபு ரங்கள் அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு பிற்காலங்களிலே கட்டப்பெற்றவை. அவற்றிலே கூடம், பஞ்சரம், சாலை என்னும் அமைப்புகள் சிறப்பிடம் பெறுகின்றன.


வெளிக்கோபுரங்கள் எல்லாம் ஒன்பது தளங்களோடு அமைந்தவை.


அவையொவ்வொன்றும் ஏறக்குறைய 150 அடி உயரமானவை. அவை எல்லாம் மேனோக்கிய உட்சரிவான வளைவுகளுடன் அமைக்கப் பெற்று கவர்ச்சிமிகுந்த கோலத்துடன் விளங்குகின்றன. வெளிக்கோபுரங்களிற் கீழைக்கோபுரமே மிகவும் புராதனமாகக் கொள்ளப்படுகின்றது.

அது காலாகால மாகப் புனர்நிர்மாணம் பெற்றுள்ளது. அதன் புராதனமான அம்சங்கள் அடிப்பாகத்தில் மட்டுமே காணப்படுகின்றன.

அதில் உள்ள தேவகோட்டங்களும், மாடக்குழிகளும் கூடுகளும் சீர்குலைந்த நிலையிற் காணப்பட்டன.

(தொடரும்)


மீனாட்சி நாயக்க மண்டபம்


கல்யாண மண்டபம்

# தேர்தல் பிரச்சார கண்காட்சிகளை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும்

## ஐ.தே. முன்னணி

(கொழும்பு)

பொதுமக்களின் பணத்தை விரையமாக்கி அரசாங்கம் மேற்கொள்ள தயாராகி வரும் தேர்தல் பிரச்சார கண்காட்சிகளை உடனடியாக நிறுத்துமாறு ஐக்கிய தேசிய முன்னணியின் மீடியா வோச் நிறுவனம் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இது குறித்து அந்த நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் ஷிரால் லக்திலக்காவின் கையெழுத்தில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை மீண்டும் ஒருமுறை கண்டி நடத்தவும் விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றியதாகக் கூறப்படும் கப்பலை காலி முகத்திடல் கடற்பரப்பிலும், காலியிலும் மக்களின் பார்வைக்காக வைக்கப்படவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய தேசிய முன்னணி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

சாதாரண காலத்தில் அரசாங்கத்தின் செலவில் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியையோ விடுதலைப்புலிகளின் கப்பலையோ மக்களின் பார்வைக்கு வைப்பது சிக்கலுக்குரியதல்ல. எனினும் திடீரென அரசாங்கம் இந்த கண்காட்சிகளை நடத்த தீர்மானித்திருப்பதானது தேர்தல் சட்டங்களை முழுமையாக மீறும் நடவடிக்கையாகும் என்றும் இவ்வாறான கண்காட்சிகளுக்கு அரசாங்கத்தின் பணமே செலவிடப்படுகிறது. எனினும் இந்த கண்காட்சிகளின் மூலம் அரசாங்கம் தனது தேர்தல் பிரச்சார பணியை முன்னெடுக்கவே முயற்சிக்கிறது எனவும் ஷிரால்லத்திலக மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-2,6)

# குற்றச்சாட்டுகளை சுமத்தவே எதிர்க்கட்சிகள் அதிக காலத்தினை செலவிடுகின்றன-ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டை அபிவிருத்தி செய்யும் சவாலை எதிர்நோக்க அனைவரும் தயாராக வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். போர் வெற்றி தொடர்பில் சிலர் உரிமை கோர முனைகின்ற போதிலும் போர் வெற்றி அனைத்து மக்களுக்கும் உரிமையானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் இதன் பிரகாரம் போர் நடைபெற்ற காலத்திலும் அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வந்ததாக அவர் தெரிவித்துள்ளதுடன் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கே அதிக காலத்தை செலவிடுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-2-6)

# பொன்சேகாவை ஆட்சிபீடமேற்றவே சிறுபான்மை மக்கள் தீர்மானித்துள்ளனர்

## யோகராஜன்



(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆட்சி பீடம் ஏற்ற வேண்டும் என சிறுபான்மை மக்கள் தீர்மானித்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஷின் தேசிய அமைப்பாளர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் சகல சிறுபான்மை மக்களும் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஜனாதிபதி பதவியில் அமர்த்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் மத்திய மலைநாட்டு தமிழ்மக்களை எவரும் குறைத்து மதிப்பிடக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் விவகாரங்களில் மிகவும் சாணக்கியமான முறையில் மலையக மக்கள் தீர்மானங்களை மேற்கொள்வார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டதோடு பெருந்தோட்டப் பகுதிகளில் சுமார் 10 இலட்சம் வாக்காளர்கள் காணப்படுவதாகவும் இதில் 70-80 வீத மக்கள் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதர வளிப்பார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# பெற்றோலின் விலையை குறைத்தமை அரசாங்கத்தின் தேர்தல் குண்டு

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பெற்றோலின் விலையை 15 ரூபாயினால் குறைத்தமையானது அரசாங்கத்தின் தேர்தல் குண்டு என ஜே.வி.பியின் அரசியல் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் பெற்றோலின் விலைகள் குறைந்ததன் காரணமாகவோ பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபம் அதிகரித்துள்ளதாலேயோ இந்த விலைக்குறைப்பு மேற்கொள்ளப்படவில்லை. தேர்தலை குறிவைத்தே இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்பட்டதாக அது தெரி வித்துள்ளது.

மேலும் 2008ஆம் ஆண்டு மே மாதம் வரை எரிபொருள் பீப்பாய் ஒன்றின் விலை 137 டொலர் வரை அதிகரித்திருந்தது. 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மசகு எண்ணெய் பீப்பாயின் விலை 45 டொலர்களாக குறைந்த போதும் அதன் பலனை அரசாங்கம் மக்களுக்கு வழங்கவில்லை.

தற்போது மக்கள் அரசாங்கத்தின் தன்னிச்சையான மக்கள் விரோத செயற்பாடுகளுக்கு பதிலளிக்க தயாராகிவரும் நிலையில் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் எண்ணம் ராஜபக்ஷ நிர்வாத்தினருக்கு ஏற்பட்டுள்ளது.

சுமார் ஒரு வருடகாலமாக பெற்றோலுக்கு 82 ரூபாய் வரியை விதித்து மக்களிடம் கொள்ளையிட்டு கறுப்புச் சந்தை முதலாளிகளைப் போன்று செயற்பட்ட மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தமது அதிகாரம் இல்லாமல் போயிடுமோ என்ற அச்சம் காரணமாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதாக இனம்காட்டி கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஜே.வி.பி. குறிப்பிட்டுள்ளது. (2-6)

# வாக்குகளை உறுதிப்படுத்த இடம் பெயர் மக்கள் தொடர்பில் அதிக கரிசனை காட்டப்படவில்லை

## தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இடம் பெயர் மக்கள் வாக்களிப்பினை உறுதிப்படுத்த அரச அதிகாரிகள் அதிக முனைப்பு காட்டத்தவறியுள்ளதாக முன்னணித் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் குற்றம் சுமத்தி யுள்ளன. குறிப்பாக தேர்தல் செயலகம் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் இடம் பெயர் மக்கள் விவகாரத்தில் மெத்தனமான போக்கை கடைபிடித்து வருவதாக கபே மற்றும் பப்ரல் ஆகிய அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதில் தற்கால அடையாள அட்டைகளை விநியோகம் செய்தல் மற்றும் வாக்களிப்பதாக மக்களை பதிவு செய்தல் போன்ற நடவடிக்கைகளில் அரச அதிகாரிகள் காட்டும் அக்கறை திருப்தி அளிக்கவில்லை என்றும் பல்வேறு சவால்களையும் கஷ்டங்களையும் எதிர் நோக்கிய இடம் பெயர் மக்கள் போதிய அளவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காத பட்சத்தில் தேர்தலில் நாட்டம் காட்டமாட்டார்கள் என கபே அமைப்பின் பணிப்பாளர் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இடம் பெயர் மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்வது மிகவும் அவசியமானது எனவும் வாக்களிப்பில் கலந்து கொள்ள முடியாத 1.5 மில்லியன் மக்களின் வாக்குகளுக்கு ஜனாதிபதித் தேர்தலின் முடிபுகளை மாற்றியமைக்கக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்காக அவர்களை வாக்களிப்பில் கலந்து கொள்ள செய்யும் நடைமுறைச்சாத்தியமுடைய பொறிமுறையொன்று அமுல் படுத்தப்பட வேண்டும் எனவும் பப்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (2-6)




## தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு ஐ.தே.கவின் உறுப்பினர் கடத்தல்

(கொழும்பு)

மருதானை சுதுவெல்லப் பகுதி ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளர் கீத்சிறி ராஜபக்ஷவை இனந்தெரியாத நபர்கள் கடத்திச் சென்றுள்ளதாக மருதானை பொலிஸில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது. இந்த செய்தியை மருதானை பொலிசார் உறுதி செய்துள்ளனர்.

இதேவேளையில் தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தேர்தல் கண்காணிப்பு சுயாதீன அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. (ஓ-2,6)

# பிரதான வேட்பாளர்கள் 50 வீத வாக்குகளை பெற்றுக்கொள்வதை தடுப்பதே நோக்கம்

## சிவாஜிலிங்கம்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான இரண்டு வேட்பாளர்களும் 50 வீத வாக்குகளைப் பெற்றுக்கொள்வதனை தடுப்பதே தமது பிரதான நோக்கம் என சுயாதீன வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தாமும், புதிய இடது சாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான டாக்டர் விக்கிரமபாகு கருணாரட்ன்வும் இணைந்து யாழ்ப்பாணத்தில் பிரச்சாரங்களை மேற்கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரம், சுயாட்சி மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றை முதநிலைப்படுத்தி தாம் தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுக்க உள்ளதாகவும் சிறுபான்மை மக்களின் பலத்தை இந்த தேர்தலில் வெளிப்படுத்த வேண்டும் எனவும் இவ்வாறு சிறுபான்மை கட்சிகளின் பலத்தை வெளிப்படுத்த வேண்டுமாயின் பிரதான இரண்டு வேட்பாளர்களும் 50 வீத வாக்குகளை பெற்றுக்கொள்வதனை தடுக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் ஆதரவு அளிக்கக்கூடாது எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஓ-2,6)

# பொன்சேகாவின் ஆதரவாளர்களை கைது செய்ய சதித்திட்டம்

## சிங்கள ஊடகம் தகவல்


(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கும் 28 பேரை கைது செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டு வருவதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்பிரகாரம் ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு ஆதரவளிக்கும் அரசியல்வாதிகள், வர்த்தக பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 28 பேரை எதிர்வரும் நாட்களில் கைது செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இந்த சதித்திட்டத்தின் முக்கிய நிகழ்வுகளாக தம்பர அமில தேரர் மற்றும் ஐக்கியதேசியக் கட்சி அமைப்பாளர் கீத்சிறி ராஜபக்ஷ ஆகியோர் கைது செய்யப்பட்ட சம்பவங்களை கருத முடியும் என ஜெனரல் சரத் பொன்சேகாவின் தேர்தல் இணைப்பு அதிகாரிகளில் ஒருவரான அசங்க மஹாகெதர தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு தங்குமிட வசதி அளித்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை சுமத்தி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவர்களை கைது செய்து 90 நாட்களுக்கு தடுத்து வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு ஆதரவாளர்களை கைது செய்வதன் மூலம் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை சீர்குலைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)








சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையக் கலைவிழா அண்மையில் தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி மங்கல விளக்கேற்றுவதையும், மாணவர்களது கலைநிகழ்வையும், உப அதிபர் திருமதி ரு.இராசரத்தினம் மாணவர்களைக் கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரி நிருபர்)

# உலகத் தமிழ் செம்மொழி மாநாடு கூடிக் கலையும் மாநாடாக இருக்காது

## கலைஞர் கருணாநிதி



(சென்னை)

கோவையில் நடைபெறவுள்ள உலகத் தமிழ் செம்மொழி மாநாடு கூடிக் கலையும் மாநாடாக இருக்காது என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

செம்மொழி மாநாடு குறித்து சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் அளித்த பதிலில் இது கூடிக் கலையும் மாநாடாக அல்ல; மாநாட்டு வெற்றிக்குப் பிறகு இந்தியப் பேரரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழும் அமைய வேண்டும் என்பதைத் தொடர் நடவடிக்கைகள் மூலம் வலியுறுத்துவோம் என்று கூறியுள்ளார்.

அத்தோடு 1968 ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற போது,சென்னையில் தமிழ் அறிஞர்களுக்கு சிலைகள் வைக்கப்பட்டன. இந்த மாநாட்டிலும் அப்படிப்பட்ட நோக்கம் இருக்கிறதா என்ற கேள்விக்கு அந்தக் கருத்து கூட்டத்தில் எடுத்துச் சொல்லப் பட்டது. அத்தைகைய சிலைகள் யார் யாருக்கு குறிப்பாக எந்தத் தமிழ் அறிஞர்களுக்கு கோவையிலே வைக்கவேண்டும் என்பது பற்றியெல்லாம் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்படும் என உறுதி அளித்திருக்கிறோம் என்று கூறினார்.

அத்தோடு தமிழக எதிர்க் கட்சிகளை மாநாட்டுக்கு அழைப்பீர்களா? என்ற கேள்விக்கு எல்லோரையும் அழைத்தோம். நாங்கள் வருவதற்கில்லை என்று பிரதான எதிர்க் கட்சியான அ.தி.மு.க , ம.தி.மு.க , தே.மு. தி.க ஆகிய கட்சிகள் நாங்கள் எழுதிய கடிதத்துக்கு பதில் அனுப்பிவிட்டார்கள் என்று கருணாநிதி கூறியுள்ளார். (2-6)

## கால்கோள் விழா நடத்தக் கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச அரச பாடசாலைகளில் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சுற்றுநிருபத்திற்கமைய நாளை மறுநாள் திங்கட்கிழமை தரம் 1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா நடத்தப்பட வேண்டுமென்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

பாடசாலைகள் 2009 ஆம் ஆண்டு மூன்றாம் தவணை விடுமுறை நிறைவு பெற்று மீண்டும் 2010 இல் ஆரம்பிக்கும் நாளான நாளை மறுநாள் திங்கட்கிழமை தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதித்து அவர்களை தரம் 2 மாணவர்கள் வரவேற்கும் நிகழ்வை தத்தமது பாடசாலைகளில் நடத்தும்படி சகல அதிபர்களையும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ஓ-29)

## செவிநுகர் கனிகள் -நூல் வெளியீட்டு விழா

### அழைப்பிதழ்

இடம்:- நல்லை ஆதீனம்
காலம்:- இன்று 02.01.2010
நேரம் :- பிற்பகல் 3.00 மணி
தலைமை:- பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா.

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
பேராசிரியர் அ. சண்முகதாஸ்

**நிகழ்ச்சி நிரல்**

பிற்பகல் : -

3.00 இறைவணக்கம்
3.10 வரவேற்புரை - பேராசிரியர்.அ.சண்முகதாஸ்
3.20 ஆசியுரை - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
ஆதீன முதல்வர், நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்.
3.30 வாழ்த்துரை - செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.
3.40 தலைமையுரை - பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராசா
தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
3.50 வெளியீட்டுரை - திரு.என்.விஜயசுந்தரம்
அதிபர், இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, திருநெல்வேலி
4.00 நூல் வெளியீடும் சிறப்புப் பிரதி வழங்கலும்
4.10 அறிமுகவுரை - சிவத்தமிழ்ச் சொல்லழகர் ச.லலீசன்
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.
4.25 நயப்புரை - கலாநிதி வேல்நம்பி
முதுநிலை விரிவுரையாளர், வணிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
4.40 ஏற்புரை - கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

இவ்விழாவிலே பங்குபற்றிச் சிறப்புச் செய்யுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

A/L புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான உசாத்துணை நூல்

"செல்வத்துள் சிறந்த செல்வம் செவிச் செல்வம்"

(இ)

## நிர்க்கதியான நிலையில் தற்போது எஸ்.பி.திஸாநாயக்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி அரசாங்கத்தில் இணைந்து கொண்ட எஸ்.பி.திஸாநாயக்க தற்போது அரசியல் ரீதியாக பெரும் நிர்க்கதிக்குள்ளாகியிருப்பதாகவும் ஜனாதிபதியைச் சந்தித்து தனிப்பட்ட ரீதியாக பேச்சு நடத்த ஒருவாரமாக எஸ்.பி.முயற்சித்த போதும் அதற்கு இதுவரை சந்தர்ப்பம் கிடைக்கவில்லையென எஸ்.பி.க்கு நெருக்கமான அவரது அரசியல் ஆதரவாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அமைதி காத்து வரும் எஸ்.பி. திஸாநாயக்க புத்தளத்தில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் பொதுக் கூட்டமொன் றுக்கு வாழ்த்துச்செய்தியொன்றை அனுப்பியிருந் தார்.

அதில் ஜனாதிபதி கலந்து கொள் ளும் கூட்டங்களில் தான் கல ந்து கொண்டு முன்னாள் ஜனாதிபதி,எதிர்க்கட்சித் தலைவர், மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர ஆகியோருக்கெதிராக உரையாற்ற சந்தர்ப்பம் வழங்குமாறு திஸாநாயக்கா ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் ஊடாக ஜனாதிபதியிடம் பலமுறை கோரிக்கை விடுத்திருந்த போதிலும் இதுவரை அதற்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை எனத் தெரிகின்றது.



அதேவேளை அவர் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக்க ட்சியில் இணைத்துக் கொள்ளப்பட்டமை தொடர்பில் பிரதமர் பதவியை எதிர்பார்த்து செயற்பட்டுவரும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மாத்திரமில்லாது பசில் ராஜபக்ஷவும் அவர் களது விருப்ப மின்மையை பகிரங்க மாகத் தெரிவித்துள் ளதாகத் தெரிகிறது.இந்த நிலைமையில் இவ ருக்கு எதிர்கால அரசாங்கத் தின் கொள்கைகளைத் தயா ரிக்கும் பொறுப்பு மாத்திரமே ஜனாதிபதியினால் வழங்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை யகத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து எஸ்.பி. திஸாநாய க்கவிற்கு பணியாற்றும் வகையில் அலரி மாளிகையில் அறையொன்றை ஒதுக்கு மாறு ஜனாதிபதி தனது மேல திக செயலாளர் காமினி செனரத்திற்கு ஆலோசனை வழங்கியிருப்பதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (2-6)

## கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட மூன்று இலங்கையர் கைது

### இங்கிலாந்தில் சம்பவம்

இங்கிலாந்தில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட மூன்று இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதமுனையில் குறித்த கொள்ளை முயற்சி இடம்பெற்றுள்ளதாக பிரித்தானிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.


குறித்த இலங்கையர்கள், நொர்த்ஹெம்டனில் உள்ள பண்ணை ஒன்றில் பணத்தைக் கொள்ளையிட முயற்சித்துள்ளனர். பண்ணையில் காசாளாரை ஆயுத முனையில் மிரட்டி பணம் பறிக்க முயற்சித் துள்ளனர்.

இந்தக் கொள்ளை முயற்சியின்போது பணம் களவாடப்படவில்லையெனவும், காசாளரின் கையடக்கத் தொலைபேசி மட்டுமே களவாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகி றது.

காவல்துறை ஹெலிகொப்டர்களின் உதவியுடன் த்ப்பிச் சென்ற இலங்கையர்கள் கைது செய்யப்பட்டதாகவும் ,பின்னர் அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# கல்லில் நாதஸ்வரம் இளம் சிற்பி சாதனை

(நாமக்கல்)



மூன்றரை கிலோ எடையுள்ள கல்லில் நாதஸ் வரத்தை வடிவ மைத்து நாமக்கல் சிற்பி சாதனை படைத்துள் ளார்.

தற்போது சிற்ப வேலை செய்வோர் போதிய வருமான மின்றி வேறு தொழிலுக்கு சென்று விட்டதால் ஒரு சில இடங்களில் மட்டுமே சிற்பத் தொழில் நடைபெறுகிறது.

சிற்பக் கலை சான்றாக திருவாரூரில் ஆயிரத்து 100 ஆண்டுகளுக்கு முன் கல் லில் வடிவமைத்த ஐந்தரை அங்குலம் அளவு கொண்ட 'திமிரி' என்ற இசைக்கருவி உள் ளது.அதில் வெறும் ஒலியை மட்டுமே கேட்க லாம்.

ஆனால் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த சிற்பி சின் னக்கண்ணு கல்லில் உருவாக்கிய நாதஸ்வரத்தில் இசை யும் கேட்கும் வகையில் வடிவமைத்து சாதனை படை த்துள்ளார்.

அது மட்டுமல்லாமல் மூன்றரை அடி உயர லலிதாம்பிகை சிலையில் தலை, கை, கால் பகுதியில் தட்டினால் சப்தஸ்வரங்கள் ஒலிக்கும் வகையில் அமைத்துள்ளார். தமிழ கத்தில் ஏழு கன்னிகள் கொண்டு நான்கடி உயரத்தில் ஒரே கல்லில் வடிக்கப்பட்ட இரண்டு கற்சங்கிலிகளை உருவாக்கியுள்ளார்.

இதுகுறித்து சிற்பி சின்னக்கண்ணு கூறி யதாவது,

சிற்பத் தொழில் எனது குலத்தொழில் அல்ல. சிறு வயது முதலே சிற்பியிடம் கற்று 30 ஆண்டாக சிலை வடிவமைத்து வருகி றேன். புதுமையாக வடிவமைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் நாதஸ்வரத்தை கல்லில் வடிவமைத்தேன்.

இதை வடிவமைக்க 30 நாளானது. எங்கள் பகுதி நாதஸ்வர கலைஞர் வரத ராஜன் மூலம் பல்வேறு பாடல்களை வாசித்து கல் லால் வடிவமைக்கப்பட்ட நாதஸ்வரத்திலும் இசையை கொண்டு வர முடியும் என நிரூபித் தேன்.

இது எனக்கு பிறகு வரும் இளம் சிற்பி களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும். இவ் வாறு சின்னக்கண்ணு கூறினார். (2-6)




# தமிழகத்திலுள்ள அகதிமுகாம்கள் சீரமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

(சென்னை)

தமிழ் நாடு அரசு இலங்கை முகாம்களில் உள்ள குறைபாடுகளை நீக்கி சீரமைப்பு செய்ய முடிபு செய்துள்ளதாக செய்திகள் தெரி விக்கின்றன. அதன்படி தமிழக அமைச் சரவைக் கூட்டத்தில் ரூ 100 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

இதில் முதல்கட்டமாக அனைத்து முகாம் களிலும் சீரமைப்பு பணிகள் செய்வதாக ரூ 37 கோடியே 33 இலட்சத்து 11 ஆயிரம் ஒதுக் கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தாப்பாத்தி, குளத்துவாய்ப்பட்டி ஆகிய அகதிகள் முகாம்கள் சீரமைக்கப்பட உள்ளன.

இதற்கமைய தாப்பாத்தி அகதிகள் முகா மில் ரூபா 19 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் வீடுகள் திருத்தம் மற்றும் புதுப்பித்தல் பணி யும் ரூபா 2 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பில் புதிய ஆழ்குழாய் கிணறு மற்றும் கைப்பம் அமைத்தல், ரூபா 4 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் புதிய கழிப்பறைகள் அமைத்தல், ரூபா 7 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பில் வீடுகளில் மின்கம்பிகள் திருத்தம் மற்றும் மின் உபகரணங்கள் மாற்றுதல் ஆகிய பணி கள் மொத்தம் ரூ 33 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் செய்யப்படவுள்ளன.

மேலும் குளத்து வாய்ப்பட்டி அகதிகள் முகா மில் ரூ8 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் வீடுகள் திருத்தல் மற்றும் புதுப்பித்தல் ரூ 10 ஆயிரம் மதிப்பில் புதிய ஆழ்குழாய் கிணறு மற்றும் கைப்பம் அமைத்தல் ஆகிய பணிகள் மொத்தம் ரூ 8 இலட்சத்து 80 ஆயிரம் மதிப் பில் செய்யப்பட உள்ளதோடு தூத்துக்குடி மாவட்டத்தில் தாப்பாத்தி, குளத்துவாய்ப்பட்டி ஆகிய 2 அகதிகள் முகாம்களிலும் மொத்தம் ரூபா 42 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் சீரமைப்பு பணிகள் செய்யப்பட உள் ளன. இந்தப் பணிகள் விரைவில் தொடங் கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. (2-6)

# வெள்ளை நிற காகம்

(கடலூர்)



கடலூர் பாதிரிக் குப்பம் ருக்குமணி நகரைச்சேர் ந்தவர் பா. ம. க.பிரமு கர் சக்தி வேல். இவ ரது வீட்டில் நேற்று முன் தினம் மாலை வெள்ளை நிற காகம் ஒன்று பறந்து வந்து அமர்ந்தது.

பசிமய்க்கத்தில் சோர்வுடன் காணப்பட்ட காகத்தை சக்திவேல் பிடித்து வைத்திருந்தார்.

தகவலறிந்த ஏராளமான மக்கள் ஆவலுடன் காகத்தை வேடிக்கை பார்க்கச் சென் றனர்.இதனால் அப்பகுதியில் திடீர் பரபரப்பு ஏற் பட்டது: காகம், வனத்துறையிடம் ஒப்படைக்கப் படும் என சக்திவேல் தெரிவித்துள்ளார்.(2-6)

# இலங்கை அகதிகள் மீண்டும் இந்தியாவுக்கு

(இரமேஸ்வரம்)



தலைமன்னாரிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 2மணிக்கு படகில் புறப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த நடராஜா (60), விஜிதா (30), இவரது குழந்தைகள் உட்பட 5 அகதிகள் அரிச்சல் முனை கடற்கரைக்கு சென்றனர் பின்னர் அங்கிருந்து பொலிஸாரினால் மண்டபம் அகதிகள்முகாம் அனுப்பி வைக்வகப்பட்டுள் ளனர் என்று இந்திய அங்கு சென்று இறங்கிய விஜிதா கூறியதாவது ; கணவர் இராஜ்குமார் 2ஆண்டுகளுக்கு முன் இங்கு வந்தவர், சிறையில் இருப்பதாக கதவல் கிடைத்தது. இலங்கையில் யுத்தம் முடிந்தபின் முகாமில் அடைக்கப்பட்ட எங்களை இரண்டு மாதத்திற்குப் பின் இராணுவம் விடுவித்து மன்னாருக்கு அனுப்பி வைத்தது.

இரண்டு மாதம் மன்னாரில் குழந்தைகளுடன் இருந்தேன். இங்கு சிறையில் இருக்கும் என் கணவரை பார்க்க நேற்று முன்தினம் படகில் அகதியாக வந்தேன் என்றார்.

தமிழக அகதிகள் முகாம்களில் இருக்கும் தமிழர்கள், இலங்கைக்குச் செல்வதற்கு விருப்பம் தெரிவித்து வரும் நிலையில், நீண்ட நாட்களுக்குப்பின் இராமேஸ்வரத்திற்கு அகதிகள் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# புலியிடம் இருந்து பெண்களை காப்பாற்றிய செல்போன்

(நைனிடால்)


உத்தரகாண்ட் மாநிலம் நைனிடால் நகரில் இருந்து 70 கி.மீ.தொலைவில் உள்ள கிராமம் தைடா. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 2 பெண்கள் காட்டுப் பகுதிக்குச் சென்று ஒரு மரத்தில் ஏறி தங்களின் கால்நடைகளின் தீவனத்துக்காக மரக்கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கே வந்த ஒரு புலி அந்த மரத்துக்கு அடியில் உட்கார்ந்து கொண்டது. இதனால் 2 பேரும் மரத்தை விட்டு இறங்க முடியாமல் தவித்தனர். தவிர புலியின் கை யில் சிக்கனால் அதோகதிதான் என்ற கிலி யால் நடு நடுங்கினார்கள். 2 மணி நேரத்துக்கு மேலாகியும் புலி அங்கிருந்து நகர வில்லை.

அப்போது மரத்தில் இருந்த ஒரு பெண் புத்திசாலித்தனமாக தான் வைத்திருந்த செல் போன் மூலம் உறவினர்களிடம் தொடர்பு கொண்டு புலியின் பிடியில் சிக்கியிருப்பதை தெரிவித்தார்.

உறவினர்கள் வன இலாகா அதிகாரி களை அழைத்து கொண்டு சம்பவ இடத்துக்கு வந்தனர். புலியைப் பார்த்த வன இலாகா வினர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இந்த சத்தத்தைக் கேட்டு மிரண்ட புலி அங்கிருந்து வேகமாக ஓடி காட்டுக்குள் மறைந்து விட்டது.

அதன் பின்னர் 2 பெண்களும் மரத்தில் இருந்து பத்திரமாக கீழே இறங்கி வந்தனர். ஆபத்திற்கு உதவிய செல்போனை நன்றிப் பெருக்குடன் அவர்கள் கண்களில் ஒற்றியும் கொண்டனர். (2-6)



சிதம்பரம் நடராஜர் கோவில் ஆருத்ரா தரிசன விழாவில் பக்தர்கள் புடைசூழ சுவாமி தேரில் ஆரோகணித்து வருவதைப் படத்தில் காணலாம்

# செம்மொழி அறிவிப்பு குறித்த முதல்வரின் குற்றச்சாட்டு பொய்யானது

## இல.கணேசன்



(சென்னை)

தமிழ் செம் மொழி அறிவிப்பு தள்ளி போனத ற்கு பா.ஜ.க. முன் னணித் தலைவ ர்கள் தான் காரணம் என்று முதல்வர் கருணா நிதி கூறுவது உண்மைக்கு புறம்பான குற்றச் சாட்டு என்றும், செம்மொழி பட்டியல் தொடர் பாக வெள்ளை அறிக்கையை மத்திய அரசு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் பா.ஜ.க. வின் முன்னாள் மாநில தலைவர் இல. கணே சன் கூறியுள்ளார்.

சென்னையில் நடந்த தமிழக பா.ஜ.க. பொதுக்குழுக் கூட்டத்தில் பேசிய அவர் நாட் டின் பாரம்பரியத்திற்காக பாடுபடும், போரா டும் ஒரே கட்சி பா.ஜ.க., தான். தமிழகத்தில் சில கட்சிகள் தமிழ் மொழி யை தாங்கள் தான் பாதுகாத்து வருவது போன்ற மாயையை உருவாக்க முயற்சிக்கின்றன.

ஆனால் பா.ஜ.க. பாரதிய ஜனசங்கமாக இருந்த போதே தமிழ் மொழியை வழக்கு மொழி யாக மாற்ற குரல் கொடுத்தது. பா.ஜ.க. முன்னணித் தலைவர்கள் திராவிடக் குடும் பத்தின் மீது கொண்டிருந்த தீராத வெறுப்பின் காரணமாக தமிழ் செம்மொழியாக அறிவிப் பதில் காலதாமதம் ஏற்பட்டது என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார். இது உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டு.

தமிழை செம்மொழியாக அறிவிக்க பா.ஜ.க. ஆட்சியில் வாஜ்பாயை மூன்று முறை சந் தித்து மனு கொடுத்தோம். அவர், செம்மொழி பட்டியல் எந்த துறையில் வருகி றது என்று கேட் டார். இது குறித்து அதி காரிகளிடம் விசாரித்த போது அப்படி ஒரு பட்டியலே இல்லை என்று கூறிவிட்டனர்.

ஆனால் ஐக்கிய முற்போக்கு கூட்டணி தேர்தல் அறிக்கையில் தமிழ் செம்மொழி யாக அறிவிக்கப்படும் என்று கூறியிருந் தது. இந்தக் கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகு தான் செம்மொழி பட்டியல் உருவாக்கப்பட்டு அதில் செம்மொழி சேர்க்கப்பட்டது. செம் மொழி பட்டியல் தொடர்பாக மத்திய அரசு வெள்ளை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

கடந்த 40 ஆண்டுகளாக மாறி மாறி தமி ழகத்தில் ஆட்சி செய்யும் திராவிட கட்சிகளால் தமிழை வழக்கு மொழியாக கொண்டுவர முடியவில்லை. தற்போதுள்ள இளைஞர் கள் தமிழை படிக்க விரும்புவதில்லை. இவர்களே தொடர்ந்து ஆட்சி செய்தால் தமிழில் பேசக் கூட தமிழ கத்தில் இளைஞர்கள் இருக்க மாட்டார்கள் என்றார். (2-6)

## 2036 ஆம் ஆண்டில்

# பூமி மீது மோதவிருக்கும் இராட்சத விண்கல் தடுப்பதற்கு ரஷ்யா திட்டம்



(மொஸ்கோ)

இராட்சத விண்கல் ஒன்று 2036 ஆம் ஆண்டு பூமி மீது மோதவுள்ளது. அப்படி மோதினால் பேரழிவு ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது. இதைத் தடுப்பதற்காக விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்ப ரஷ்யா திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

விண்வெளியில் இட்சக்கணக்கான விண்கற்கள் சுற்றி வருகின்றன. அவற்றில் எப்போதாவது புவியீர்ப்பு விசையால் ஈர்க்கப் பட்டு பூமியை நோக்கி வருவதுண்டு. அவை வரும் வேகத்தில் நடுவானில் தீப்பிடித்து எரிந்துவிடுவதுண்டு. அளவில் சிறியவை தான் இப்படி எரிந்து சாம்பலாகின்றன. பெரிய கற்கள் இருந்தால் எரிந்து சாம்பலா காமல் பூமிமீது விழுவதும் உண்டு.

அடுத்த 26 ஆண்டுகளில் பூமிக்கு பேரா பத்தை ஏற்படுத்தப்போவது அபோபிஸ் என்னும் விண்கல் ஆகும். இது அளவில் பெரியதாகும்.

இந்த விண்கல் 2004 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இது 2036 ஆம் ஆண்டு பூமியின் சுற்றுப்பாதைக்குள் நுழைந்து பூமிமீது மோதவுள்ளது. இந்த எரிகல் 1150 அடிவிட்டம் உள்ளது.

இது பூமி மீது மோதினால், அது மோதுமிடத்தில் உயிரினமே இல்லாத அளவுக்கு அழிவு ஏற்படும். பிரான்ஸ் நாட்டின் பரப்பளவுக்கு பூமியில் பாலைவனம் ஏற்படும் என்று கூறப்படுகிறது.

இது 2029 ஆம் ஆண்டு பூமிக்கு மிக அருகில் அதாவது 30 ஆயிரம் கிலோமீற்றர் தொலைவில் வரும். அதற்கு அடுத்த 7 ஆண்டுகளில் அது தன் பாதையை மாற்றிக் கொண்டு பூமி மீது மோதும் என்று கருதப்படுகிறது.

இது பூமி மீதுமோதுவதற்கான வாய்ப்பு 45ஆயிரத்தில் ஒன்றாகும் ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 45ஆயிரத்தில் ஒன்று என்ற விகிதத்தில் உள்ள வாய்ப்பு உண்மையில் நடந்து விடக்கூடாது என்பதற்காகவும் அப்படி நடப்பதை தவிர்ப்பதற்காகவும் ரஷ்யா நடவடிக்கை எடுத்து வருகிறது. அது விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பி அதை அபோபிஸ் விண்கல் மீது மோதச் செய்வதென்று ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்காவின் நாசா, ஐரோப்பாவின் விண்வெளி ஆராய்ச்சிக் கழகம், சீன விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றுடன் கூடி நாங்கள் ஆலோசனை நடத்த இருக்கிறோம் என்று ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சிக் கழக அனாட்டோலி பிரிமோகோன் தெரிவித்திருக்கின்றார். (2-6)

# பன்றிக் காய்ச்சலுக்கான உடனடி சோதனை முறை கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

உலகையே அச்சுறுத்தி வரும் பன்றிக் காய்ச்சல் எனப்படும் ஸ்வைன் புளூ நோய் தொற்றைக் கண்டறிய உடனடி சோதனை முறை உருவாக்கப்பட்டுள்ளது.

பன்றிக் காய்ச்சல் நோய் தொற்று உள்ளவர்களின் உமிழ்நீர் மூலமே சோதனை மேற்கொள்ளப்படுகிறது. இந்த சோதனை முடிவை அறிவதற்கு குறைந்த பட்சம் 24 மணிநேரம் முதல் 36 மணிநேரம் வரையாகிறது.

தற்போது கண்டறியப்பட்டுள்ள புதிய முறைமூலம் உடனடியாக முடிபுகளைத் தெரிந்துகொள்ளமுடியும். தானியங்கி முறையில் செயற்படும் இந்த சோதனை முடிபுகள் மிகத்துல்லியமாக இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோய்க்குக் காரணமான வைரஸ் கிருமிகள் உமிழ் நீரில் உள்ளனவா என்பது கண்டறியப்படும். இதன்மூலம் ஆய்வகத்தில் சோதனை செய்யும் தொழில்நுட்ப பணியாளர்களின் நேரத்தையும் கணிசமாகக் குறைத்துவிடும்.

விஸ்கான்சின் மருத்துவக் கல்லூரி டாக்டர் கெல்லிஜே ஹென்றிக்சன் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் இப் புதிய சோதனை முறையை உருவாக்கியுள்ளனர்.

இதன்மூலம் காய்ச்சலுக்குக் காரணமான எச்1என்1 வைரஸ் கிருமிகள் மற்றும் எச்3என்2 ஆகிய வைரஸ் கிருமிகளையும் கண்டறிய முடியும் என்றும் இந்த உடனடி சோதனை முறை மூலம் மிக அதிக எண்ணிக்கையானோரின் உமிழ்நீரை மிகக் குறைந்த நேரத்தில் சோதனை செய்துவிட முடியுமென்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

# ஆப்கானில் அமெரிக்காவுக்கு பெரும் இழப்பு

ஆப்கானிஸ்தானின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள தளமொன்றின் மீது கடந்த புதனன்று பிற்பகல் நடத்தப்பட்ட தற்கொலைத்.தாக்குதலில் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. உழவு நிறுவனம் கடந்த 25 வருடங்களில் இல்லாத அளவுக்கு மிகப் பெரிய இழப்பை எதிர்கொண்டதாக தெரியவந்துள்ளது.

கோஸ்ட் மாகாணத்தில் நடந்த இந்தத் தாக்குதலில் முழுநேரமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலே சி.ஐ.ஏவுக்காக பணியாற்றிய 8 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதாகவும், மேலும் ஆறு அமெரிக்கர்கள் இதில் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆப்கானிய இராணுவ அதிகாரியாக பணியாற்றிய தமது ஆளே அந்தத் தாக்குதலை நடத்தியதாக தலிபான்கள் கூறியுள்ளனர்.

பல சோதனைச் சாவடிகளினூடாக கடந்து சென்று அந்த நபர் உடற்பயிற்சி நிலையத்தில் அந்தத் தாக்குதலை நடத்தியதாக அவர்கள் கூறியுள்ளனர். (2-6)

# தாய்ப்பாலும் கள்ளச் சந்தையில்

(சிட்னி)

இயற்கையிலேயே நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்த தாய்ப்பால் அவுஸ்திரேலியாவில் இன்டர்நெட் மூலம் கள்ளச் சந்தையில் விற்பனை செய்வது அதிகரித்து வருகிறது. தாய்ப்பால் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது. இயற்கையாக தாய்மார்களிடம் சுரக்க வேண்டிய இந்த உன்னதமான தாய்ப்பாலும் இப்போது சந்தைப் பொருளாகி விட்டது.

இதற்கு லீட்டருக்கு 50 ஆயிரம் ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதுகுறித்து தாய்ப்பால் வங்கி இயக்குநரான மரியா ரியன் கூறுகையில், லாப நோக்கற்ற வங்கிகள் 1.2 லீட்டர் தாய்ப்பாலுக்கு 2500 ரூபாய் கட்டணம் வசூலிக்கின்றன. இதன்மூலம் ஏராளமான மக்களுக்கு தாய்ப்பாலின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வு அதிகரிக்கும் என்பது என் கருத்து. ஆனால் தாய்ப்பால் கள்ளச்சந்தையில் விற்பனை செய்வது பற்றி அரசு தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதுகுறித்து ராயல் மெல்போர்ன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னோலஜி நிபுணரான ஜெனிபர் ஜேம்ஸ் கூறியதாவது,

கள்ளச்சந்தை மூலம் முறையற்ற வகையில் தாய்ப்பால் விற்பனை செய்வது அதிகரித்து வருகிறது. இது மிகவும் ஆபத்தானதாகும். இவ்வாறு விற்பனை செய்யப்படும் தாய்ப் பாலில் வைரஸ் மற்றும் பக்டீரியா ஆகியவற்றிற்கான பரிசோதனை செய்யப் படுவதில்லை. கள்ளச்சந்தையில் இன்டர் நெட் மூலம் தாய்ப்பால் விற்பனை செய்கின்றனர். பெரிய மருத்துவமனைகளில் தாய்ப்பால் வங்கிகள் அமைக்கலாம். ஆனால் அது தொடர்பான சில முரண்பட்ட சட்டத்திட்டங்களால் அவற்றை அமைப்பது கடினமாக உள்ளது இவ்வாறு ஜெனிபர் ஜேம்ஸ் கூறினார். (ஓ-6)

# இணையத்தளம் மூலம் திருடனைப் பிடித்த இளைஞன்

இங்கிலாந்தில் உள்ள வேல்ஸ் பிரதேசத்தில் கார்டிப் நகரைச் சேர்ந்தவர் டிரைஸ்டன் புரூக்ஸ். இவர் 10 ஆண்டுகள் சேமித்து வைத்து அந்தப் பணத்தில் தன் கனவு சமையலறையை உருவாக்கினார். இதற்கான அவர் 5இலட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் சமையலறை சாதனங்களை வாங்கிப் போட்டார்.

அவர் 'வார இறுதியில் வெளியூருக்கு சென்றுவிட்டு வீடு திரும்பினார்.

அப்போது சமையலறை சாதனங்கள் அனைத்தும் காணாமல் போயிருந்தது. இதனால் அவர் பொலிஸில் புகார் செய்தார். அவர்களால் திருடனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

டிரைக்ஸ்டன் புரூக்ஸ் மனம் தளரவில்லை. இணையத்தளம் மூலம் பொருட்கள் ஏலம் விடப்படுவதை கண்காணித்து வந்தார். அவர் பயன்படுத்திய பிரிட்ஜ் இணையத் தளம் மூலம் விற்பனைக்கு வந்திருப்பதை அவர் அறிந்தார். அதை 30 கிலோ மீற்றர் தொலைவில் வசிக்கும் மனிதர் தான் விற்க முன்வந்தவர்.

அவரைத் தொடர்பு கொண்டு அதை வாங்க விரும்புவதுபோலப் பேசினார். அது தன் வீட்டில் திருடப்பட்டது தான் என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட அவர் பொலிஸுக்கு தகவல் கொடுத்தார். பொலிஸார் திருடனைக் கைது செய்தனர். (ஓ-6)




# இன்ரர்நெற் மூலம் மருத்துவ சிகிச்சை

இன்ரர்நெற் மூலம் டாக்டரை தொடர்பு கொண்டுபேசி சிகிச்சை பெறுவதற்குரிய நடைமுறை அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. டாக்டர்கள் மற்றும் மருத்துவ மனைகளுக்கிடையே கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் *டெலிமெடிசின்* வசதி உள்ளது. ஆனால் நோயாளி இன்ரர்நெற் மூலம் நேரடியாக டாக்டரை தொடர்பு கொண்டு பேசி சிகிச்சை பெறும் முறைஅறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க காப்புறுதி நிறுவனமான ஆப்டம் ஹெல்த் இந்த சேவையை இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு மாநிலமாக அமுல்படுத்தவுள்ளது. முதலாவதாக இந்தசேவை டெக்சாஸ் மாநிலத்தில் தொடங்குகிறது . இந்த திட்டத்தின் மூலம் டாக்டரிடம் முன் அனுமதி வாங்க வேண்டியதில்லை. மருத்துவமனைக்கு சென்று மணிக்கணக்கில் காத்திருக்க தேவையில்லை. படுக்கையில் இருந்தபடியே இன்ரர்நெற் மூலம் நமது சந்தேகத்தையும் நோய் அறிகுறிகளையும் கூறிமருத்துவ ஆலோசனைகளையும் மருந்துகளையும் பெறலாம். அதுமட்டுமல்லாது, மருத்துவச் செலவும் இந்த முறையில் குறைவு. டாக்டரிடம் செல்லும் போது அவர் உடலை பரிசோதித்து நோய் அறிகுறியை அறிய முடியும் .இந்த சேவையில் அது முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# அன்னை தெரேசாவின் தபால் தலை அமெரிக்கா வெளியிடுகிறது



(வோஷிங்டன்)

அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரும், ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் சேவை செய்தவருமான அன்னை தெரேசாவை கௌரவிக்கும் வகையில் அவரது உருவப் படம் பொறித்த தபால் தலையை அமெரிக்கா இந்த ஆண்டு வெளியிடயிருக்கிறது.

இந்த தபால் தலை இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி விற்பனைக்கு வெளிவருகிறது. இவர் தவிர, ஹொலிவுட் நடிகையும், ஒஸ்கார் விருது பெற்றவருமான கேதரைன் ஹெப்பர்ன் தபால் தலையும் வெளியிடப்படுகிறது. அவர் 4 முறை ஒஸ்கார் விருது பெற்றவர் ஆவார். அவர் 40 படங்களில் நடித்திருக்கிறார். (ஓ-6)

# இயேசுநாதர் வளர்ந்த வீடு கண்டுபிடிப்பு

பாலஸ்தீனம் பகுதியில் பெத்தலஹேம் உள்ளது.இங்கு இயேசுநாதர் பிறந்ததாகக் கூறப்படுகிறது. பின் நாசரேத் நகரில் குடிபெயர்ந்ததாக பைபிள் கூறுகிறது.

இஸ்ரேலில் உள்ள நாசரேத் பகுதியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய புதையுண்ட 50 வீடுகளை, தொல்பொருளாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இயேசுநாதர் பிறந்து வளர்ந்த குடிசைய்யைப் போலவே இந்த வீடுகள் உள்ளன.

இந்தப்பகுதியில் யேசுநாதர் நண்பர்களுடன் விளையாடி இருக்கலாம் என இங்குள்ள தேவாலய பாதிரியார் யேக்கரம் தெரிவித்துள்ளார். (ஓ-6)





தென்மராட்சி வலயம் தமது பகுதிப் பாடசாலைகளுக்கிடையே நடத்திய சைவசமய சம்பந்தமான போட்டி களில் வெற்றிபெற்ற மாணவர்க ளுக்கு கல்விப் பணிப்பாளர் கு.பிறேம காந்தன் சான்றிதழ் வழங்கிக் கௌர விப்பதையும், அருகில் சைவசமய பாட ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கம் நிற்பதையும், பரிசு பெற்ற நாடகத்தின் காட்சியினையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- சாவகச்சேரி நிருபர்)

# வன்னியில் புதிதாக உருவாகும் அறிவிக்கப்படாத அகதி முகாம்கள்

(கொழும்பு)

வவுனியாவில் உள்ள தடுப்பு முகாம்களில் இருந்து விடுவிக்கப்படும் வன்னிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவதாக அரசாங்கம் கூறினாலும் அவர்களில் பெரும்பாலானோர் சொந்த வீடுகளில் குடியிருக்க அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. மன்னாரின் வடக்குப் பகுதி, வவுனியா வடக்கின் சில பகுதிகள், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் குறிப்பிட்ட சில இடங்களில் இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்து வருகிறது. ஆனால் வவுனியா தடுப்பு முகாம்களில் இருந்து மீளக்குடியமர்வுக்காகக் கொண்டு செல்லப்பட்டவர்கள் பெரும்பாலானோர் அந்தந்தப் பகுதி ப் பாடசாலைக் கட்டடங்களிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. இராணுவப் பாதுகாப்பு போடப்பட்ட பாடசாலைக் கட்டடங்கள் இப்போது அறிவிக்கப்படாத அகதிமுகாம்களாக மாறி வருகின்றன. தடுப்பு முகாம்களில் இருந்து மக்களை விடுவித்து விட்டதாக இலங்கை அரசாங்கம் காட்டிக் கொள்வதுடன் அவர்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டிருப்பதாகவும் வெளியுலகுக்கு பரப்புரை செய்து வருகிறது. எனினும் தடுப்பு முகாம்களில் இருந்து கொண்டு செல்லப்பட்டோரில் சிறியளவிலானவர்களே தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் இராணுவத்தினரின் கண்காணிப்பில் உள்ள அந்தந்தப் பகுதி பாடசாலைக் கட்டடங்களிலே தங்க வைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக புளியங்குளம் இந்துக் கல்லூரில் மட்டும் 300 வரையான பொதுமக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிங்கப்பூரில் இருந்து சென்ற 29 பேர் கொண்ட பௌத்த யாத்திரைக் குழுவொன்று பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் புளியங்குளம் இந்துக் கல்லூரி முகாமில் தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு பால்மா, இனிப்பு வகைகளை வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதனிடையே கண்ணி வெடிகள் அகற்றப்படாத வன்னிப் பிரதேசத்துக்குள் அரசியல் இலாபம் கருதி அரசாங்கம் அவசர அவசரமாக தமிழ்மக்களை மீளக்குடியமர்த்தி வருவதாக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார். (ஓ-2-6)

## சுதேச வைத்தியத்துறை ஆறு ஆண்டுத் திட்டம்

சுதேச வைத்தியத்துறையை மேம்படுத்தும் பொருட்டு மஹிந்த சிந்தனையின் மூலம் தயாரிக்கப்பட்ட ஆறு ஆண்டுத் திட்டத்தின் கீழ் பல விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எஞ்சிய விடயங்களைக் கிரமமாக நிறைவேற்றுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.சுதேச வைத்தியர்களை நேற்று முன் தினம் அலரிமாளிகையில் சந்தித்து உரை யாற்றும்போதே ஜனாதிபதி இந்த விடயத்தை வெளியிட்டுள்ளார்.

பிக்குமார், வைத்தியர், ஆசிரியர், விவசாயிகள், தொழிலாளர் என்ற பஞ்ச எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் எந்நாளும் சுதேச வைத்தியத்திற்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அங்கு தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். (2-6)




தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையும் மனிதநேய உதவி அமைப்புக்களின் கூட்டமைப்பும் இணைந்து மந்துவில் கிழக்கில் நடத்திய தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில்வழிகாட்டல் கருத்தரங்கில் சபையின் பிரதேச மேற்பார்வையாளர் கே.கணேஸ்வரன் உரையாற்றுவதையும், தொழில் வழிகாட்டல் ஆலோசகரும் தொழிற்பயிற்சி பரிசோதகருமான ஞா.தே.றட்ணகுமார் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரி நிருபர்)

# பகிரங்கப்படுத்துவதன் மூலம் புலிகளின் சொத்துக்களை முடக்குவதில் சிக்கல்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

சில ஊடகங்களில் வெளியிடப்படும் அறிக்கைகளின் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச சொத்துக்களை முடக்குவதில் சிக்கல் நிலைமை உருவாகியுள்ளதென வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்த சில விமானங்கள் வெளிநாடுகளில் காணப்படுவதாக வெளியான செய்தி காரணமாக அரசாங்கத்தின் முயற்சிகளுக்குத் தடை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் புலிகளின் சொத்துக்கள் முடக்கப்படும் வரையில் எதிர்க்கட்சி பொறுமை காக்கவேண்டும் எனவும் நடவடிக்கைகள் பூர்த்தியானதன் பின்னர் சகல தகவல்களும் எதிர்க்கட்சியுடன் பகிர்ந்து



கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு விடுதலைப்புலிகள் அமைப்பு வலுவான ஓர் சர்வதேச வலையமைப்பைக் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இரகசியமான முறையிலேயே அவர்களின் சொத்துக்களை முடக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவற்றைப் பகிரங்கப்படுத்துவதன் மூலம் சரியான முறையில் சொத்துக்களை முடக்கமுடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் அமைச்சர்களாக மாறவேண்டும்

## ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் அமையவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அமைச்சர்களாக மாற வேண்டும். அதற்கேற்ற வகையில் செயற்பட அரசாங்கம் தயாராகவுள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கடந்த புதன் கிழமை இரவு தமிழ்க் தேசியத் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.க்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோரை சந்தித்து பேசிய போதே ஜனாதிபதி அமைச்சர்களாக மாறுமாறு அழைப்பு விடுத்துள்ளார். இதற்கு பதிலளித்த தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்கள் இருவரும் நாம் பதவி பட்டங்களுக்காக



அரசியலில் ஈடுபடவில்லை . தமிழ்மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே நாம் செயற்படுகின்றோம் என்று கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# தமிழ் இளைஞரை படுகொலை செய்த காவல்துறை அதிகாரி சிறையில் மரணம்

(கொழும்பு)

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தமிழ் இளைஞர் ஒருவரை பலவந்தமாக நீரில் மூழ்கடித்து படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய காவல்துறை அதிகாரி சிறையில் மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த சில மாதங்களிற்கு முன்னர் பம்பலப்பிட்ட கடற்பரப்பில் தமிழ் இளைஞர் ஒருவரை பலவந்தமாக நீரில் மூழ்கடித்து சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் படுகொலை செய்திருந்தனர்.



இந்தச் சம்பவத்துடன் தொடர்புள்ள காவல்துறை அதிகாரி ஒருவர் நேற்று காலை வெலிகடை றொமன்ட் சிறையில் இருதய நோயால் மரணமடைந்துள்ளதாக சிறை ஆணையாளர் மேஜர் ஜெனரல் வி.ஆர்.டி. சில்வா தெரிவித்துள்ளார். (2-6)



வரலாற்றுச் சிறப்புமிக்க காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலய இரதோற்சவ நிகழ்வில் சுவாமி தேரிலே திருவீதியுலா வருவதையும், அடியவர்கள் தூக்குக்காவடி, அங்கப்பிரதட்சணம் செய்து தமது நேர்த்திகளை நிறைவு செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கோபி)

# கே.பி. வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்

## இதை நான் கூறினால் 4ஆம் மாடிக்கு செல்ல நேரிடும்

### ரவூப் ஹக்கீம்



(கொழும்பு)

தடுப்புக் காவலிலுள்ள கே.பி. மூன்று தடவைகள் இலங்கை அரசாங்கத்தால் வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அவர் அழைத்துச் செல்லப்பட்டமைக்கான காரணத்தை வெளியிட்டால் தான் நான்காம் மாடிக்கு செல்லநேரிடும் அதனால் அதனை தவிர்த்துக் கொள்வதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக கல்முனையில் தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே இதனைத் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கைதுசெய்யப்பட்ட கே.பி. கொழும்பில் முன்னாள் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க மற்றும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் தங்கிய அசைச்சர்கள் வாசஸ்தலத்திலேயே தங்கவைக்கப்பட்டு விசாரிக்கவப்பட்டு வருகிறார். முக்கிய சந்திப்புக்களுக்காக கொழும்பிலுள்ள பிரபல விடுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் மீண்டும் அந்த வீட்டிற்கே கூட்டிச் செல்லப்டுகிறார் இவ்வாறு 3 தடவைகள் வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட் டிருக்கிறார். விடுதலைப்புலிகளின் கப்பல்களை அவரிடமிருந்து வாங்குவதற்கு சகல நடவடிக்கைகளும் அரச தரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கூறியுள்ளார்.

அத்தோடு தற்போது பொன்சேகாவுக்கு ஆதரவளிப்பது என முஸ்லிம் காங்கிரஸ் ஒரே இரவில் முடிவு எடுத்துவிடவில்லை என்றும் பல விடயங்களை பரிசீலித்து சர்வதேச மற்றும் ஏனைய சக்திகளின் இலங்கை தொடர்பான நிலைப்பாடுகளை விரிவாக பரிசீலித்து சிறுபான்மை மக்களின் நலன்களுக்காக சரியான முடிவு எது என்று ஆராய்ந்த பின்பே முடிவு அறிவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# இலங்கை அரசு என்னை சித்திரவதை செய்யவில்லை

### மருத்துவர் சிவபாலன்



(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையே கடும் மோதல்கள் நடைபெற்ற காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் செயல்பட்ட மருத்துவமனைகளில் பணியாற்றிய நான்கு அரச மருத்துவர்களும் அவர்களோடு சேர்ந்து மருத்துவ சேவையாற்றி வந்த சிவபாலன் என்ற மருத்துவரும் போரின் இறுதி நாட்களில் அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்த போது கைதுசெய்யப்பட்டனர்.

அரச மருத்துவர்கள் நான்கு பேரும் அக்டோபர் மாதம் விடுவிக்கப்பட்டாலும், மருத்துவர் சிவபாலன் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

கடந்த திங்களன்று நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட சிவபாலன் நிர்வாக நடைமுறைகளை முடித்துக்கொண்டு புதன்கிழமை இரவு வீடு திரும்பியுள்ளார்.

தாம் கைது செய்யப்பட்டது குறித்தும் காவலில் இருந்த போதும் தாம் நடத்தப்பட்ட விதம் குறித்து பி.பி.சி.க்கு அவர் அளித்த செவ்வியில் காவலில் இருந்த போது தாம் சித்திரவதை செய்யப்படவில்லை என்றும் தற்போது தாம் ஒரு இலட்ச ரூபா பிணையில் விடுதலைசெய்யப்பட்டிருப்பதாகவும் மேலும் மாதம் ஒருமுறை காவல்துறையிடம் சென்று தான் கையொப்பமிட வேண்டும் என்கிற நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (ஓ-2-6)

# புலிகளின் தலைவருடன் நான் நீச்சல் தடாகத்தில் நீராடினேனா?

### உறுதிப்படுத்துமாறு மனோ சவால்



(கொழும்பு)

வன்னியில் நீச்சல் தடாகத்தில் நான் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் குளித்தேனென யாராவது உறுதிப்படுத்தினால் நான் எனது அரசியல் வாழ்வை துறப்பதற்கு தயார் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, விமல்வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி எம் மீதான சேறடிப்புப் பிரசாங்களை முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

நானும் வேலுப்பிள்ளை பிரபாகரனும் இணைந்துநின்ற காட்சிகள்கொண்ட வீடியோ நாடாக்களை அவர்கள் ஒளிபரப்பி வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின்தலைவருடன் நான் நீச்சல் தடாகத்தில் குளித்ததாகவும் வீரவன்ச தெரிவித்து வருகிறார். ஆனால் அதற்கான ஆதாரங்களை அவர் முன்வைக்கவில்லை. அவர்கள் ஆதாரங்களை முன்வைத்தால் நான் அரசியலை விட்டு ஒதுங்குவதற்கு தயார்.மக்கள் அனைவரும் சமஉரிமைகளுடன் வாழவேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம்.

தமிழ்மக்களின் துன்பங்களை நீக்குவதற்கு மஹிந்த அரசு எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. நான் தமிழ் மக்களுக்கு சார்பாக நிற்பதில் பெருமை கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-2-6)

# போலி நாணயத்தாள்களுடன் நான்கு இளைஞர்கள் கைது

(கொழும்பு)

படையினருக்கு நன்றி பாராட்டும் வகையில் வெளியிடப்பட்ட நாணயத்தாள்களை ஒத்த போலி நாணயத்தாள்களுடன் நான்கு இளைஞர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். குறித்த இளைஞர்களிடமிருந்து 80 ஆயிரம் ரூபா தாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

போர் வெற்றியைக் குறிப்பதற்காகவும், படைவீரர்களுக்கு நன்றி பாராட்டும் நோக்கிலும் அண்மையில் இலங்கை மத்திய வங்கியினால் ஜனாதிபதி மற்றும் படைவீரர்களின் உருவப்படங்கள் அடங்கிய ஆயிரம் ரூபா தாள் வெளியிடப்பட்டது. இந்தப் புதிய ஆயிரம் ரூபா நாணயத் தாளுக்கு ஒத்த போலி நாணயத்தாள்களை நான்கு இளை ஞர்கள் தயாரித்து புழக்கத்தில் விட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்விப் பொதுத்தராதர உயர்தர வர்த்தகப் பிரிவைச் சேர்ந்த மாணவர் ஒருவரே இந்த போலி நாணயத்தாள் மோசடியின் பிரதான சூத்திரதாரி எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ரூபா நாணயத்தாள் அண்மையில் வெளியிடப்பட்டதனால் அதனை போலித் தாளிலிருந்து பிரித்தறிவது கடினம் எனக் குறிப்பிடப்படுகிறது.

இந்தக் காரணத்தினால் குறித்த நாணயத்தாளை இளைஞர்கள் அச்சிட்டு வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# ஊடகவியலாளர்களை படுகொலை செய்தவர்களை அம்பலப்படுத்த முடியும்

### சரத் பொன்சேகா



(கொழும்பு)

கடந்த காலங்களில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களை யார் படுகொலை செய்தார்கள் என்ற விபரங்களை அம்பலப்படுத்த முடியுமென எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் படுகொலைகளின் பின்னணியில் தாம் செயற்பட்டதாக சிலர் குற்றம் சுமத்தி வருவதாகவும், தாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட 24 மணித்தியாலங்களுக்குள் உண்மையான குற்றவாளிகளை நாட்டுக்கு அம்பலப்படுத்த முடியுமெனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

அரச ஊடகவியலளர்களுடன் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

மேலும், அரசியல் சார்பாக செயற்பட்டு வரும் அரச ஊடகங்கள் பக்கச்சார்பற்று சுயாதீன அமைப்பாக உருவாக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

தற்போது இராணுவ ஆட்சியை முன்னெடுக்கவுள்ளதாக தம்மீது குற்றம் சுமத்திவரும் அரசாங்கமே இராணுவ ஆட்சிக்கான முனைப்புக் காட்டிவருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். அதற்கமைய 24 இராணுவ அதிகாரிகளுக்கு அரச உயர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், நான்கு மேஜர் ஜெனரல்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# ஷெல் எரிவாயு நிறுவனம் வழக்குத் தாக்கல்

ஷெல் எரிவாயு நிறுவனம், நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எரிவாயு விலையை தீர்மானிக்கும் விலைச் சமன்பாட்டின் மூலம் தமது நிறுவனத்திற்கு பாரியளவு நட்டம் ஏற்பட்டுள்ள தாக செல் எரிவாயு நிறுவனம் குற்றசும் சுமத்தியுள்ளது.

தமது நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ள 1.4 பில்லியன் ரூபா நட்டத்தை நுகர்வோர் விவகார அதிகார சபை செலுத்த வேண்டுமென குறித்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னதாக நட்டஈட்டுப் பணத்தை செலுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (2-6)

# பீடை நாசினிகளின் தோற்றமும் வகைகளும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 9-XXVI



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**பூஞ்சண நாசினிகள்**

எமது பயிர்களில் நோயை ஏற்படுத்தும் நுண்ணங்கிகளுள் பூஞ்சணங்கள் அல்லது பங்கசுக்கள் ஒருவகையாகும். இந் நுண்ணங்கிகளால் தோற்றுவிக்கப்படும் நோய்களை சரியாக இனங்கண்டு நோயின் அறிகுறிகளை வைத்தும், தேவையேற்படும் இடத்து அவற்றை நுணுக்குகாட்டியினூடாக பரிசோதித்தும் இன்னது என இனங்காண முடிந்தால் மட்டுமே அவற்றைக் கட்டுப்படுத்துவது சுலபமாகும். நுண்ணங்கிகளினால் ஏற்படுத்தப்படும் நோய்களை அவை விரைந்து தொற்று ஏற்படாது அவ தானித்துக் கொள்வதும், மேலும் பரவாது தடுப்பதும் மிக முக்கியமானதாகக் கருதப் படுகின்றது.

**நுண்ணங்கிகள் சில - அவற்றினால் ஏற்படுத்தப்படும் நோய்கள் பல**

நுண்ணங்கிகளுள் பங்கசுக்கள் அல்லது பூஞ்சணங்கள் (Fungi), பக்ரீறியாக்கள் (Bacteria), வைரசுக்கள் (Virus), மைக்கோபிளாஸ்மாக்கள் (Mycoplasma) இவற்றுடன் நெமற்றோட்டுக்கள் அல்லது விலாங்குப் புழுக்கள்(Nematodes) என்பவற்றையும் இணைத்துக் கொள்ளலாம். விலாங்குப்புழுக்களை நுண்ணங்கி என அழைப்பதில்லையாயினும் அவற்றினுடைய நுண்ணிய அளவினை வைத்து நுண்ணங்கிகளுக்கும் அங்கிகளுக்கும் இடைப்பட்டதாக அதனை வைத்திருக்கிறார்கள்.

எங்கே நிரல்படுத்துகின்றோம் என்பது இங்கே ஒரு பிரச்சினையல்ல. அதனை இன்னது என சரியாக கண்டறிய முடிகின்றதா? முடிந்தால் அவற்றினால் ஏற்படுத்தப்படும் நோய்களை சேதங்களை விரைந்து கட்டுப்படுத்த வழிகிடைக்குமல்லவா!

**சரியாக இனங்காணுவது மிகவும் அவசியம்**

எனதருமை விவசாயப் பெருமக்களே! பீடைகள் என இக்கட்டுரையில் விளித்து அவற்றிலே பலவகைகள் உண்டெனவும் இதற்கு முதல் விபரமாகத் தந்திருந்தேன். ஒவ்வொன்றையும் கட்டுப்படுத்துவதற்கு அவற்றுக்குரிய பீடைநாசினிகளை பயன்படுத்த வேண்டும். இது அன்று தொடக்கம் கூறப்படுவதானாலும் இன்றும் தவறாக சரியான தெரிவில்லாது பயன்படுத்துவதை அறிய முடிகின்றது. பயிர்களில் ஏற்படும் நோய்கள் பற்றியோ ஏனைய பீடைகள் பற்றியோ இனங்காண விவசாய ஆராய்ச்சி நிலையத்தையோ அல்லது விவ சாய உயிரியல் துறையையோ நீங்கள் நாடலாம். சேதம் பற்றிய தெளிவில்லாது ஏதோ எமக்குத் தெரிந்ததை புரிந்துரைப்பதோ அல்லது விற்பனை செய்வதோ தவறான தாகும். இது மொட்டந் தலைக்கும் முழங்கா லுக்கும் முடிச்சுப் போடும் கதையாக ஆகிவி டும். பல இடங்களில் பல சந்தர்ப் பங்களில் இப்படியும் ஆகியிருப்பதை விவசாயிகளுடனான கலந்துரையாடல் மூலமாக அவதானிக்கக் கூடியதாயுள்ளது.



**இனங்காண்பதில் அனுபவம் உதவும்**

பீடைகளினால் ஏற்படும் பிரச்சனைகளை காண்பதில் அனுபவம் என்றுமே கைகொடுக்கும். ஆனால் இப்போதெல்லாம் புதிது புதிதாக பீடைகள்,நோய்கள் என பயிர்களில் வந்தேறு குடிகளாக வந்து பாரியளவிலான சேதத்தையும் ஏற்படுத்து வதனால் இவை பற்றி அவ்வப்போது ஆய்வுக்குட்படுத்தி அவற்றை சரியாக இனங்காண வேண்டியுமுள்ளது. விளை நிலத்தில் வைத்தும் ஆய்வு கூடத்திலும் இனங்காண என்றுமே அனுபவம் கைகொடுக்கும்.

**பூஞ்சண நோய்களும்- பூஞ்சண நாசினிகளும்**

பூஞ்சண நோய்கள் பல வகைப்பட்டன. இங்கும் மேலே குறிப்பிட்டது போல அவற்றின் வகைகளுக்கேற்ப சரியான பூஞ்சண நாசினியைத் தெரிவு செய்ய வேண்டும். வாடல், வெளிறல், கருகல், நிறம் மாறல், சோர்ந்து போதல், புள்ளிகள் தோன்றுதல், அளவில் சுருங்குதல், விகாரமாகுதல், வளர்ச்சி குன்றுதல் இப்படி பல அறிகுறிகளை (symptoms) பயிர் களில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின் றது.

அந்தந்த பூஞ்சணத்திற்கேற்ப அவற்றைக் கட்டுப்படுத்தும் சரியான பூஞ்சண நாசியினை தெரிவு செய்யவேண் டுமென்ற எனது கருத்து ஏற்புடையது என எண்ணுகிறீர்களல்லவா? வாருங்கள்! பூஞ்சண நாசினிகளைப் பற்றி மேலும் அறியலாம்.

(தொடரும்)

# தூவல் நீர்ப்பாசனம் ஒரு பயன்தரும் பொறிமுறை

பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு நீர்ப்பாசனம் இன்றியமையாத செயற்பாடாகும். பயிர்ச்செய்கைக்குத் தேவைப்படும் நீரின் அளவு,

- தெரிவு செய்யப்படும் பயிர் வகை
- மண் வகை
- காலநிலை என்பவற்றின்

அடிப்படையில் வேறுபடுகின்றது.

உத்தம அளவில் நீரினைப் பயிர்களிற்கு வழங்கும் போது அவை சிறப்பாக வளர்ந்து உயர் விளைச்சலைத் தருகின்றன. உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் நன்னீரில் 71வீதம் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தப் படுகின்றது. நீர்வளப் பற்றாக்குறை விவசாயத்துறையின் வளர்ச்சியை மட்டுப்படுத்தும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும்.

யாழ்.மாவட்டத்தில் நீர்ப்பாசனம் செய்வதற்கு நிலத்தடி நீர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரந்து பட்டுக் காணப்படும் 19,261 விவசாயக் கிணறுகளும் தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு மற்றும் தீவகப் பகுதிகளிலுள்ள 2,433 துரவுகளும் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. நிலத்தடி நீரின் தரம் மற்றும் அளவுகள் மீது செல்வாக்குச் செலுத்தக் கூடிய 1000 சிறு குளங்களும் பரந்து பட்டுக் காணப்படுகின்றன.

இந் நீர் மூலங்களுக்கு நீர் வழங்கியாக மழைவீழ்ச்சி காணப்படுகின்றது. வரண்ட வலயத்தில் அமைந்துள்ள யாழ் மாவட்டத்தில் ஆண்டிற்கான சராசரி மழைவிழ்ச்சி 1200 மில்லியன் கன மீற்றர் ஆகும்.

ஐப்பசி, கார்த்திகை மற்றும் மார்கழி மாதங்களில் கூடியளவு மழைவீழ்ச்சி பெறப்படுகின்றது. சித்திரை, வைகாசி மாதங்களில் குறைந்தளவு ம்ழை வீழ்ச்சி பெறப்படுகின்றது. குடாநாட்டின் ஆவியாதல் வீதம் தை மாதம் முதல் புரட்டாதி மாதம் வரை 4 மி.மீ நாள் ஆகவும், ஐப்பசி முதல் மார்கழி மாதம் வரை 3 மி. மீ. நாள் ஆகவும் காணப்படுகின்றது.

*பெறப்படும் மழை வீழ்ச்சியில்*

- ஆவியாதல் மூலம் 470 மில்லியன் கனமீற்றர் நீர்.
- மேற்பரப்பு வழிந்தோடல் மூலம் 420 மில்லியன் கனமீற்றர் நீர்
- பக்க ஊடுருவல் மூலம் 50 மில்லியன் கனமீற்றர் நீர் இழக்கப்படுகின்றன.

ஈற்றில் 260 மில்லியன் கன மீற்றர் நீரே நிலத்தடி நீரைச் சென்றடைகின்றது. ஊடுபுகும் மழைநீர் நன்னீர் வில்லைகளாக உவர் நீரில் மிதக்கின்றன.

யாழ் குடாநாட்டு சிவப்பு இலற்ற சோல் மண்ணில் நீர் ஊடுபுகவிடு திறன் 360 மி மீ மணி ஆகும். அத்துடன் 149 000 ஏக்கர் அடி நிலத்தடி சேமிக்கப்பட்டுள்ளது.

*நிலத்தடி நீர் தேவைகளுக்காக நுகரப்படுகின்றன*

- வீட்டுத் தேவைகள் 16.2 மி.க.மீ
- பழமரச் செய்கை 56 மி.க.மீ.
- பெரிய மரங்கள் 51.1 மி.க.மீ.
- ஆண்டுப் பயிர் 167.4 மி.க.மீ.

மொத்தமாக 290.7 மில்லியன் கனமீற்றர் நீர் வருடாந்தம் நுகரப்படுகின்றது. 30மில்லியன் க.மீ. நீர் கடந்த காலங்களில் சேமிக்கப்பட்ட நிலத்தடி நீரிலிருந்து வருடா வருடம் மேலதிகமாக நுகரப்பட்டுக் கொண்டு செல்கின்றது.இதில் பெருமளவு பங்கு நீர்ப்பாசனத் திற்காகவே பயன்படுத் தப்படுகின்றது.

**நிலத்தடி நீரின் முறையற்ற பயன்பாடு**

சேமிக்கப்படும் தரைக்கீழ் நீரின் பெரும் பகுதி கிணறுகள் மற்றும் குழாய்க்கிணறுகள் மூலம் பாவனைக்கு உட்படுத்தப்படுகின்றது.இதில் கணிசமான பகுதி பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காகவே நுகரப்படுகின்றது. விவசாயிகள் பயிர்களுக்கு பாத்தி முறை மூலம் நீர்ப்பாசனம் மேற்கொள்கின்றார்கள். இந்த நீர்ப்பாசன முறையில் பயிருக்குத் தேவையான நீரை விடக்கூடியளவு நீர் வழங்கப்படுகின்றது.

உதாரணமாக குடாநாட்டில் வெங்காயப் பயிருக்கான நீர்த்தேவை 900 மி.மீ. ஆகும். எனினும் பாத்திப்பாசனம் மூலம் வழங்கப்படும் நீரின் அளவு 1, 200 மி.மீ. ஆகும்.

திட்டமிடப்படாத முறையில் நிலத்தடி நீர் வெளியேற்றப்படும் போது நன்னீர் -உவர்நீர் சமநிலை குழப்பப்படுகின்றது. இதனால் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளைப் பாதிக்கக் கூடிய வகையில், நிலத்தடி நீரானது உவராதல் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

நீர் தொடர்ச்சியாக வெளியேற்றப்படும் போது உள் நிலப்பகுதிகளை நோக்கிய உவர்நீரின் அசைவு அதிகரிப்பதோடு கிணறுகளின் உவர்த் தன்மையும் அதிகரிக்கும். அளவுக்கதிகமாக நிலத்தடி நீரினைப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்துவதே இப் பிரச்சினைக்கான கார ணமாகும்.

விவசாயிகள் வலுகூடிய நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் மின்சார மோட்டார்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பாத்திப் பாசனத்தை மேற்கொள்கின்றார்கள். இவ் இயந்திரங்கள் கூடியளவு நீரினைக் குறைந்தளவு நேரத்தில் கிணறுகளிலிருந்து அகத்துறிஞ்சி வெளியேற்றுகின்றன. இதனால், அகத்துறிஞ்சப்படும் நீரினளவை நன்னீர் ஊற்றுக்களால் ஈடுசெய்ய.முடியாத நிலை ஏற்படுகின்றது. இச் செயற்பாடு நிலத்தடி நீர் உவராதலை அதிகரிக்கிறது.

அத்துடன் மிதமிஞ்சிய பாத்திப் பாசனத்தினால் இரசாயன உரம், கிருமி நாசினி என்பவை நிலத்தடி நீரிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.இதனால் , நிலத்தடி நீரின் தரம் தொடர்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. உலக சுகாதார ஸ்தாபன சிபாரிசிற்கமைய நீரில் இருக்கக்கூடிய உச்ச நைதரேற்றினளவு 10 mg/l ஆகும். ஆயினும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் ஆய்வின்படி,

- தொட்டிலடி -15.4 mg/l
- உடுவில் -19.4 mg/l
- சிறுப்பிட்டி - 21.9 mg/l
- புலோலி - 17.5 mg/l
- கரணவாய்-18.0 mg/l
- கைதடி -15.0 mg/l

ஆகிய பிரதேசங்களில் நீரில் நைதரேற்றினளவு உயர்வாகக் காணப்படுகின்றது. இந் நைத்திரேற்று செறிவு கூடிய நீரைக் குடிநீராகப் பயன்படுத்தும் போது, பல வேண்டத்தகாத நோய்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும்.

வி.இளங்குமார்
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)அலுவலகம்
யாழ்ப்பாணம்

இந்நிலையில், கிணறுகள் மற்றும் துரவ்கள் என்பவற்றிலிருந்து நீரினை எடுத்துச் செல்லும் வாய்க்கால்களில் ஏற்படும் நீரிழப்பினைக் குறைத்தல் வேண்டும்.அத்துடன், தோட்டத்தினுள்ளும் நீர் முகாமைத்துவத்தினைச் சிறப்பாகச் செய்து குறைந்தளவு நீருடன் நீர்ப்பாசனம் செய்தல் வேண்டும்.

எனவே இப் பிரச்சினைகளிற்கு குறைந்தளவு நீருடன் பயிர்ச்செய்கையை மேற் கொள்ளக்கூடிய நுண் நீர்ப்பாசன முறையை யாழ். மாவட்டத்தில் விரிவுபடுத்துதல் அவசியமாகும்.

இதில் தூவல், சொட்டு நீர்ப்பாசன முறைகள் அடங்குகின்றன. (தொடரும்)

> பழக்கம் ஒரு முழு வளர்ச்சியடைந்த மலை. அதைத் தாண்டுவதும் கடினம். தகர்ப்பதும் கடினம்
>
> – ஆபிரிக்கா

வலம்புரி

## ஞானிகள் நடமாடிய நல்லூர் வீதி நடைபாதைச் சந்தையாக மாறும் பரிதாபம்

எதை எடுத்துக் கூறினாலும் கோபம் கொள்ளும் கலாசாரம் இலங்கை மக்கள் அனைவரிடமும் ஏற்பட்டு விட்டது.

பத்திரிகைகள் வெறுமனே தகவல்களை மட்டும் வெளியிட வேண்டும் என்ற நினைப்பு பொறுப்பான பதவி வகிப்பவர்கள் பலரிடமிருப்பதைக் கண்டு உள்ளம் வேகுகின்றது.

இதற்கு மேலாகத் தனி நபர்களும் தங்கள் தனிப்பட்ட தவறுகளை மூடி மறைப்பதற்கு இனத்தைத் தூக்கி துலாம்பரப்படுத்துகின்ற பரிதாபமும் மிதமிஞ்சிப் போய் விட்டது.

இவையெல்லாம் எதிர்கால இனஒற்றுமைக்கு ஆரோக்கியமானதல்ல. அரசியல் பிழைப்புக்காக–ஐந்து பத்துக் கிடைக்கும் என்பதற்காக கொடி பிடிக்கும் கலாசாரம் இந்த மண்ணில் ஒழியாதவரை இன ஒற்றுமை உடைவுகளும் ஓட்டைகளும் நிறைந்ததானதாக இருக்கும்.

தனிமனிதர்கள் தங்கள் சொந்த விவகாரங்களை இனத்துவேஷம் என்று கூறுவார்களாயின் அதனை ஒரு இனத்திற்கான எதிர்ப்பெனக் காட்டி சுய இலாபம் தேடி அதனை அவர்கள் வெற்றியாகக் கருதிக் கொள்ளலாம்.

ஆனால் அவர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும்.

அதாவது ஒரு ஊடகம்–ஒரு பத்திரிகை நினைத்தால் இனத்துவேஷம் என்பதை எத்தகைய வடிவங்களிலும் கக்கி இந்த மண்ணில் நிம்மதியில்லாத ஒரு சூழலை ஏற்படுத்த முடியும்.

இருந்தும் ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இனப்பாகுபாட்டால் இந்த நாடு பட்ட அவலங்களை நாம் ஒருபோதும் மறந்து விடலாகாது.

இனம், மதம் என்பதை மறந்து மனிதர்கள் என்ற உயரிய பதத்தையே நாம் மதிக்க வேண்டும். இதில் வலம்புரி மிகவும் உறுதியாக இருக்கின்றது.

மக்கள் மத்தியில் பேசப்படும் விடயங்களை வெளிப்படுத்த வேண்டும். அதன் உண்மைத் தன்மையை உரியவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

அப்போதுதான் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படும். நீதி கிடைக்கும். நியாயம் வேரூன்றும். இதைவிடுத்து எல்லாவற்றையும் இனத்துவத்துக்குள் உள்ளடக்கி பொதுமைப்படுத்துவதை இறைவன் ஒருபோதும் மன்னிக்க மாட்டான்.

இன்று இந்த இடத்தில் நல்லூர்க் கந்தப் பெருமானின் பெருவீதி பற்றிக் குறிப்பிடுகின்றோம். ஞானிகளும், யோகிகளும் நடமாடிய அந்தத் திருவீதி இன்று பிளாஸ்ரிக் பொருள்களின் விற்பனை நிலையமாக, பூச்செடிகளின் காட்சியகமாக, தளபாடங்களை விற்றுத் தீர்க்கும் திறந்த சந்தையாக மாறியுள்ளது.

இதை நாம் கூறினால் வலம்புரி இனவாதம் புரிகின்றது என கூசாமல் சொல்லுவோர் தாராளமாக இருப்பர்.

ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. நல்லூர்த் திருவீதியில் தமிழ் மக்கள் யாரேனும் சந்தை வைத்திருந்தால் அவர்களை உரியவர்கள் துரத்தியிருப்பர். பொலிஸார் கைது செய்து தண்டித்திருப்பர்.

ஆனால் இது அவர்கள். எங்களுக்கு அரசியல் இலாபம் தேவை. ஆதலால் ஞானிகள் நடமாடிய நல்லூர்த் திருவீதி சந்தையாக மாறுகின்றது.

நல்லூர் முருகா... நாம் என் செய்வது? உரக்கக் கத்தினால் உன்னையும் உரிமைகேட்டு வந்து விடுவார்கள் என்பதால், மௌனம் காக்கின்றோம். எல்லாவற்றையும் நீயே பார்த்துக் கொள்.

# புலிகளின் சொத்துக்களை முடக்குவதில் ஊடகங்களால் சிக்கல் - அரசாங்கம்

சில ஊடகங்களில் வெளியிடப்படும் அறிக்கைகளின் காரணமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச சொத்துக்களை முடக்குவதில் சிக்கல் நிலைமை உருவாகியுள்ளது என வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான சில விமானங்கள் வெளிநாடுகளில் காணப்படுவதாக வெளியான செய்தி காரணமாக அரசாங்கத்தின் முயற்சிகளுக்குத் தடை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சொத்துக்கள் முடக்கப்படும் வரையில் எதிர்க்கட்சி பொறுமை காக்க வேண்டும். நடவடிக்கைகள் பூர்த்தியானதன் பின்னர் சகல தகவல்களும் எதிர்க்கட்சியுடன் பகிர்ந்து கொள்ளப்படும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு வலுவான ஓர் சர்வதேச வலையமைப்பைக் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இரகசியமான முறையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சொத்துக்களை முடக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவற்றைப் பகிரங்கப்படுத்துவதன் மூலம் சரியான முறையில் சொத்துக்களை முடக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச செயற்பாடுகள் தொடர்பில் முன்கூட்டிய பிரசாரம்; எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக அமைந்து விடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச–5)

# அமைச்சர் சந்திரசேகரின் பூதவுடலுக்கு நாடாளுமன்றில் இன்று அஞ்சலி!

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெரியசாமி சந்திரசேகரனின் பூதவுடல் நேற்று மாலை 5 மணி முதல் இலக்கம் 40, மெதவெலிகட, ராஜகிரிய என்ற விலாசத்திலுள்ள அமைச்சரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நாடாளுமன்றக் கட்டடத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இன்று 11மணி முதல் 12.30 மணி வரை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்களின் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

அதன் பின்னர் கடுவல வீதி வழியாக அமைச்சரின் சொந்த இடமாக தலவாக்கலைக்குப் பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். கிதுல்கலையிலிருந்து மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் பூதவுடலைப் பொறுப்பேற்று அவரது இல்லத்திற்குக் கொண்டு செல்வர்.

எதிர்வரும் 4 ஆம் திகதி மாலை 6 மணியளவில் தலவாக்கலை நகரசபை பொது மயானத்தில் அமைச்சரின் பூதவுடல் அரச மரியாதைகளுடன் தகனம் செய்யப்படவுள்ளது. (ச–3,5)

# ம.ம.முவின் புதிய தலைவராக திருமதி சந்திரசேகரன் நியமனம்

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் காலமானதையடுத்து அந்தக் கட்சியின் தலைவராக சந்திரசேகரனின் மனைவி சாந்தினிதேவி சந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் தீர்மானங்கள் யாவும் மத்திய குழுவில் அங்கீகரிக்கப்பட்டு எடுக்கப்படும் என்ற முடிபும் நேற்றுக் கூடிய கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் உயர் மட்ட அரசியல் குழு நேற்றுக் கொழும்பில் கூடி ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சர் சந்திரசேகரனின் திடீர் மறைவைத் தொடர்ந்து மலையக மக்கள் முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் 2–வதாக எஸ்.அருள்சாமியும் 3–வதாக எம்.சிவலிங்கமும் உள்ளனர்.

இந்த இருவரும் தற்போது வேறு அமைப்புகளில் அங்கத்துவம் பெறுவதால் எஸ்.அருள்சாமியை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கக் கூடிய சந்தர்ப்பம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் அமைச்சர் சந்திரசேகரனின் நாடாளுமன்றப் பதவிக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் மலையக மக்கள் முன்னணியின் அரசியல் உயர்பீடம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச–3,5)

## ஆலோசகர்களுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்திற்குச் சட்டத்துறை மற்றும் முகாமைத்துவ கற்கைகள் துறைகளுக்கு பகுதி நேரமாக ஆலோசகர்களாகக் கடமையாற்றுவதற்கு அத்துறை சார் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் அவற்றுக்குரிய துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இளமாணிப் பட்டத்தை முதலாம் தர அல்லது இரண்டாம் தர வகுப்புச் சித்தியுடன்பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுய விபரக் கோவையை எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு முன் நேரில் அல்லது பதிவுத்தபால் மூலமாக யாழ். பிராந்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். (ச)

## பொது ஆங்கில கற்கை நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பொது ஆங்கில கற்கை நெறிக்கு விண்ணப்பித்துப் பதிவு செய்தவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் ஆரம்பமாகும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## திறந்த பல்கலையில் நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சமூகவியல் துறைக்கு ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளராகப் பணியாற்றுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### கல்வியும் சமுதாயமும்



உங்களுடைய சமயத்தால் சமுதாயத்திற்கு என்ன நன்மை? என்று நம்மைக் கேட்கின்றார்கள். இவ்விதம் கேட்பதனால் உண்மையின் சோதனைக்களனாக சமுதாயம் ஆகின்றது. இது தர்க்கத்திற்கு மிகவும் முரண்படுகின்றது. சமுதாயம் என்பது வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு நிலை. அதில் நாம் கடந்து சென்று கொண்டிருக்கின்றோம். சமுதாயம் மாறாமல் ஒரு நிலையிலேயே எப்போதும் நிரந்தரமாக இருப்பதாக இருந்தால் அது, குழந்தை என்றைக்கும் குழந்தையா கவே இருப்பதைப் போன்றதாகும்.

முழு வளர்ச்சியடைந்த மனிதனாகிய குழந்தை என்ற ஒரு நிலை இருக்க முடியாது. மனிதன், குழந்தை என்ற இரண்டு சொற்களுமே ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. எனவே பரிபூரண நிலையில் அடைந்த சமுதாயம் என்று ஒன்று இருப்பதற்கில்லை. சமுதாயத்தின் இத்தகைய ஆரம்ப நிலைகளிலிருந்து மனிதன் வளர்ச்சியடைய வேண்டும். அவன் வளர்ச்சியும் அடைவான்.....உனக்குள் இருக்கும் தாமரையை நீ ஏன் மலரும்படி செய்யக் கூடாது? அப்படிச் செய்தால் தேனீக்கள் அங்கே தாமாகவந்து சேரும் என்று என்னுடைய குருநாதர் சொல்வது வழக்கம்.

## ஆன்மீக நிகழ்வு

(பருத்தித்துறை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் "மகாபாரதம்" தொடர் சொற்பொழிவினை பொன்.சுகந்தன் வழங்கவுள்ளார். (ஓ-35)

## ஒன்றுகூடல் நிகழ்வு

(வடமராட்சி)

வடமராட்சி லயன்ஸ் கழக மாதாந்த அங்கத்தவர் கூட்டமும் இயக்குனர் சபைக் கூட்டமும் புதுவருட ஒன்றுகூடல் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பருத்தித்துறை-மருதங்கேணி பிரதான வீதியில் லயன் என்.சற்குணராசா என்பவரது இல்லத்தில் நடைபெற இருப்பதாகவும் சகல லயன் அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்றும் செயலாளர் லயன்.மு.தருமலிங்கம் தெரிவித்துள்ளார். (ஓ-10)

## நில்வள கல்வியியற் கல்லூரி நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அக்குரச நில்வள தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆங்கில மொழி மூலமான கணித பாட நேர்முகப் பரீட்சைக்கு செல்ல முடியாத மாணவர்கள் நாளை மறுநாள் திங்கட்கிழமை யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றமுடியும் என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார். (ஓ)

## தளபாடங்கள் வழங்கப்பட்டன

(சாவகச்சேரி)

சாவககச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் கரைம்பைக்குறிச்சி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் தளபாடங்கள் வழங்கப்பட்டது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் விநியோகிக்கப்பட்டதாக பிரதே செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (ஓ-29)

## புதிய மாணவர்களை வரவேற்கும் வைபவம்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் 2010 புதிய கல்வியாண்டில் ஆறாம் தரத்திற்குப் புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகக் கல்லூரி ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. புதிதாக அனுமதி பெற்ற அனைத்து மாணவர்களும் தமது பெற்றோருடன் சமுகமளிக்குமாறு வித்தியாலய அதிபர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

# சிவத்தமிழ்ச் செல்வியின் 85 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதியச்சபையினால் நடத்தப்படும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 85ஆவது பிறந்த நாள் அறநிதிய அறக்கொடைவிழா எதிர்வரும் ஏழாம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான பிரதமகுருக்கள் சிவஸ்ரீ பா. அகிலேஸ்வரக்குருக்கள், நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் ஆகியோரும் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன், யாழ்.போதனா வைத்திய சாலை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சு.ரவிராஜ், தெல்லிப்பழை பிரதேச செயலர் சு.முரளிதரன் ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

மேலும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு வெள்ளவத்தை சாரதா பெண்கள் ஆச்சிரமத்தைச் சேர்ந்த செல்வி வள்ளி நாயகி கணபதிப்பிள்ளை கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும் கௌரவ விருந்தினராக அகில இலங்கை இந்துமன்ற கௌரவ செயலாளர் கந்தையா நீலகண்டன் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து சிவத்தமிழ் விருதுபெறும் சான்றோர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது.

இதில் திருகோணமலை இளைப்பாறிய ஆசிரியர்களான பொ.கந்தையா(சிவத்தமிழ் பணிசெய்த பெருமகன்), திருமதி பராசக்தி நவரத்தினம் (சிவயோக நிலையத்தை உருவாக்கி சைவத்தமிழ் பணி செய்த அம்மையார்), மாவிட்டபுரம் நாதஸ்வர வித்து வான் எஸ்.ஆர். ஞானசுந்தரம்(சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைப்பணி செய்த மூத்த கலைஞர்), தெல்லிப்பழை இளைப்பாறிய முதன்மை ஆசிரியர் ச.விநாயகரத்தினம் (கீரிமலை சிவநெறிக்கழகத்தின் ஸ்தாபகர் சிவத்தமிழ்ப் பணிசெய்த நல்லாசிரியர்) ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்பட வுள்ளனர்.

சிவதமிழ்ச் செல்வி அறக்கொடையில் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி சு.ரவிராஜிடம் சத்திரசிகிச்சைப்பிரிவிற்கான நிதி வழங்கப்படவுள்ளதுடன், வன்னியில் இடம்பெயர்ந்து முகாம்களில் வசித்து தற்போது வலிகாமம் கல்வி வலயத்தில் கல்வி கற்கும் 2010 க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கல்வி நிதி வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனிடம் வழங்கப்படவுள்ளது. (ஓ-4)

# மாற்றாற்றல் உடையோருக்கான சுயதொழில் முயற்சிக் கொடுப்பனவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 8 பயனாளிகளுக்கு வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் மாற்றாற்றல் உடையோருக்கான சுயதொழில் முயற்சிக்கொடுப்பனவுக்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் எதிர்வரும் 6ஆம் திகதி புதன் கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு தமது ஆளடையாள அட்டை, குடும்பப் பங்கீட்டு அட்டையுடன் சமூகசேவைகள் பிரிவிற்கு வரும்படி பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

கொடுப்பனவைப் பெறவுள்ளோர் விபரம்,

அ.ஆனந்தராஜா -கல்வயல், அ.விமலா தேவி -கல்வயல், ம.புவனேஸ்வரி - உசன் மிருசுவில், இ.முருகன் - கைதடிகிழக்கு, மு.இலட்சுமிப்பிள்ளைக்காக சி.முருகன் - உடையார் வீதி, கொடிகாமம், சு.கஜனி - கைதடி தெற்கு, க.ஞானகணேசன் -கற்குழி ஒழுங்கை -சாவகச்சேரி, சோ. யோகேந்திரம்- சாவகச்சேரி. (ஓ-29)

## கல்விச் செயற்பாடுகள் 11ஆம் திகதி ஆரம்பம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 2010 ஆம் ஆண்டு கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் அறிவித்துள்ளார். (ஓ-27)

## யூனியன் கல்லூரியின் கல்வி செயற்பாடுகள் 5ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் 2010 ஆம் ஆண்டின் முதலாம் தவணைக்கான கல்விச் செயற்பாடுகள் ஏற்கனவே அறிவித்தபடி நாளை மறுநாள் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படமாட்டாதெனவும் ஐந்தாம் திகதி செவ்வாய்க்கிழமை கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகுமெனவும் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். அதனால் அனைத்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் 5ஆம்திகதி செவ்வாய்க்கிழமை கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (ஓ)




## ஆங்கில பாட ஆசிரியர்களை சங்கத்தில் இணைத்துக் கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்கள் அனைவரையும் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தில் இணையுமாறு கழகத்தின் செயலாளர் எம். ஏ. ஸ்ரான்லி பெரேரா கேட்டுக் கொள்கின்றார். இச் சங்கத்தின் யாழ்.மாவட்ட பிரதிநிதியான யாழ். இந்துக்கல்லூரி ஆங்கில ஆசிரியர் சு.மகேஸ்வரன் இதற்கான விண்ணப்படிவங்களை தனது விலாசத்திற்கு சுய முகவரியுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையினை அனுப்பிப் பெற்றுக்கொள்ளுமாறு சகல ஆங்கில ஆசிரியர்களையும் சங்கத்தின் செயலாளர் சார்பில் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

# யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் பரம்பல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் தற்போது தீவிரமாக பரவி வருகிறது. டிசம்பர் மாதத்தில் 6 இறப்புக்களும் 308 நோயாளிகளும் இனங் காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், மானிப்பாய், சண்டிலிப்பாய், சுன்னாகம், கொக்குவில் ஆகிய பிரதேசங்களில் இந்நோயின் பரம்பல் அதிகமாக காணப்படுவதுடன் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது. தற்போது தென்பகுதியுடனான சுதந்திரமான போக்குவரத்து நடைபெறுகின்றமையால் தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தெற்கிலிருந்து குடாநாட்டிற்கும் குடாநாட்டிலிருந்து தெற்கிற்கும் பயணம் செய்த வண்ணமுள்ளனர். எனவே இந்நோய் மேலும் தீவிரமாக பரவி மேலும் பலத்த இழப்புக்களை ஏற்படுத்தலாம். எனவே அந்நோயினைக் கட்டுப்படுத்த அனைவரது ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிக அவசியம்.

டெங்கு காய்ச்சல் என சந்தேகித்தால்,

◆ காய்ச்சல் முற்றாக மாறும் வரை பாடசாலைகட்கு அல்லது வேலைக்கு செல்வதனை தவிர்த்துக் கொள்ளுதல். காய்ச்சலுடன் பாடசாலைக்கு அல்லது வேலைக்குச் செல்வதானால் மேலும்பலருக்கு இந்நோய் பரவலாம்.

◆ பூரணமாக படுக்கையில் ஓய்வெடுத்தல் வேண்டும்.

◆ போதியளவு நீராகாரங்களை அருந்துதல் வேண்டும். டெங்கு காய்ச்சல் ஏற்படும் போது உடலில் நீர்த்தன்மை குறைந்து டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்படும். இதனால் இறப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. அதனைத் தவிர்க்க போதியளவு நீராகாரங்களை அருந்துதல் வேண்டும்.

◆ காய்ச்சல் உள்ளபோது பரசிற்றமோல் வில்லைகளை பாவிக்கலாம். அஸ்பிரின் ரக வில்லைகளை எக்காரணம் கொண்டும் பாவித்தல் கூடாது.

◆ டெங்கு காய்ச்சல் என சந்தேகித்தால் தகுந்த வைத்திய ஆலோசனையை பெற வேண்டும். தகுதியற்ற வைத்திய சிகிச்சையின் பின்னர் இறுதி நேரத்தில் மோசமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது இறப்புக்கள் ஏற்படுவதனை தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. எனவே உரிய நேரத்தில் தகுந்த வைத்திய ஆலோசனையை பெறுமாறு வலியுறுத்துகின்றேன்.

◆ டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய சிறிய நீர்த் தேக்கங்களையும் கொள்கலனையும் அழிப்பதுடன் தங்களது சுற்றாடலை நுளம்புகள் பெருகாதவாறு சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். நிறுவனத் தலைவர்கள் தத்தமது நிறுவனங்களிலும் பாடசாலை அதிபர்கள் தத்தமது பாடசாலைகளிலும் உள்ளூராட்சி மன்றங்கள் பொது இடங்களிலும் வீட்டு உரிமையாளர்கள்/ குடியிருப்பாளர்கள் தங்களது வீடுகளிலும் இதனை கடைப்பிடிக்க வேண்டும்.

◆ உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக்கழிவு முகாமைத்துவத்தை சீரான முறையில் மேற்கொள்ள வேண்டும்.

◆ கழிவுநீர் வடிகால்கள் கிரமமான முறையில் நீர் தேங்காதவாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களினால் துப்புரவு செய்யப்படல் வேண்டும்.


◆ பொது இடங்களிலும் நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் இதற்கான சிரமதானப் பணிகள் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

சுகாதாரத் திணைக்களத்தால் மட்டும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியாது. சம்பந்தப்பட்ட அனைத்து திணைக்களங்கள், பொது மக்களும் ஒத்துழைப்பினை வழங்கினால் மட்டுமே இந்நோயின் பரம்பலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும். எனவே இந்நிலையின் தார்ப்பரி யத்தை உணர்ந்து அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)



வலி கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மூலிகை மருத்துவமாநாட்டில் டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் சிறப்புரையாற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் விவியன் சத்தியசீலன், தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், டாக்டர் வை.வரதலிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# 2010 இல் அதிக டெஸ்ட் போட்டிகள்; இந்திய வீரர் ஹர்பஜன் மகிழ்ச்சி



2010ம் ஆண்டில் அதிக டெஸ்ட் போட்டி களில் இந்திய அணி விளையாட கிரிக்கெட் சபை முயற்சி மேற்கொண்டுள்ளது குறித்து ஹர்பஜன் சிங் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமான ஆடு களங்கள் பந்துவீச்சாளர்களுக்கு பெரும் சோதனையாக இருப்பதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

இதுதொடர்பில்ஹர்பஜன்சிங்தெரிவித்ததாவது

அதிக அளவில் டெஸ்ட் பேட்டிகளில் விளையாடுவதுதான் நல்லது. 2010ஆம் ஆண்டில் இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் அதிகம் கலந்து கொள்ள இந்தியக் கிரிக்கெட் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதில் வெற்றி பெறுவதன் மூலம் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத் தைத் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

கடந்த ஆண்டில் 6 டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடிய நாம் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தோம். இந்த ஆண்டில் 10 முதல் 12 போட்டிகளில் விளையாடுவோம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவை அனைத்திலும் வெற்றிபெற முனைப்புக் காட்டுவோம்.

சமீப காலத்தில் இந்திய அணி அதிக பேட்டிகளில் விளையாடி வெற்றிகளைக் குவித்து வருகிறது. 35 ஆண்டுகளுக்குப் பின் நியூ சிலாந்து அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தினோம். அவுஸ்திரேலிய அணியை வென்றோம். டெஸ்ட் கிரிக்கெட்டில் முதலிடத் திலுள்ள இந்திய அணியில் நானும் இடம் பெற்றுள்ளேன் என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

கடந்த ஆண்டில் எனது ஆட்டம் திருப்தி யளிப்பதாக இருந்தது. 6 டெஸ்ட் பேட்டிகளில் 29 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளேன். சுழல் பந்து வீச்சு எடுபடாத நியூசிலாந்து மைதானத்தில் அந்த அணிக்கு எதிராக 6 விக்கெட்களை எடுத்ததை சிறப்பானதாகக் கருதுகின்றேன் என்றார்.

**அணித்தலைவர் பொறுப்பு**

எதிர்காலத்தில் இந்திய அணியின் தலைவராக விரும்புகின்றீர்களா என்ற கேள்விக்குப் பதில ளித்த ஹர்பஜன், எல்லா வீரர்களுக்கும் அணியின் தலைவராக வேண்டும் என்ற ஆசை இருக்கும். அணித்தலைவர் பதவி ஒருவரின் திறமைக்குக் கிடைக்கும் அங்கீகாரம். அணியின் வெற்றிக்கு எனது சிறப்பான பங்களிப்பைச் செலுத்தவேண்டும் என்பது தான் எனது ஆசை.

தற்போது அணித்தலைவர் தோனி சிறப் பாகச் செயற்பட்ட வருகிறார். அதுவரை இருந்த அணித்தலைவர்களிலேயே அவர் தான் வெற்றிகரமானவர். இந்திய அணி தர வரிசையில் முதலிடத்தைப் பிடித்ததற்கு அவரது திறமையே காரணம். அந்த பெருமை தோனியைத்தான் சேரும்.

தற்போது அணியில் இளைஞர்கள் திற மையாக விளையாடி வருவது மகிழ்ச்சி யளிக்கும் விஷயம். இளைஞர்கள் பலத்துடன் 2011 உலகக் கோப்பையை இந்திய அணி கைப்பற்றும் என்றார்.

## அதிக போட்டிகளுக்கு ஐ.சி.சி காரணமில்லை லார்கட் தெரிவிப்பு

(புதுடில்லி)

அதிக கிரிக்கெட் போட்டிகளில் வீரர்கள் பங்கேற்பதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை கார ணம் இல்லை. சம்பந்தப்பட்ட கிரிக்கெட் சபை கள்தான் இதற்குக் காரணம் என ஐ.சி.சி. தலைமை நிர்வாக அதிகாரி ஹரூண் லார்கட் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் ஒரு நாள் போட்டிகளைத் தொடர்ந்து புதிய பரிமாணமாக தற்போது இருபது-20 போட்டிகள் வந்து விட்டன. இதனால் வீரர்கள் அதிக போட்டிகளில் பங்கேற்க வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டுள்ளது.

இடையிடையே ஐ.பி.எல். உள்ளிட்ட உள் நாட்டுக் கிரிக்கெட் தொடர்களிலும் பங்கேற் கின்றனர். இதன் விளைவாக போதுமான ஓய்வு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. தவிர காயம் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் ஏற் படுகின்றது.

இது குறித்து ஐ.சி.சி. தலைமை நிர்வாக அதிகாரி லார்கட் கூறியதாவது;

இன்றைய கால கட்டத்தில் கிரிக்கெட் வீரர் கள் அதிக போட்டிகளில் விளையாடி வருகின் றனர். இதனால் அவர்களுக்கு சரியான ஓய்வு கிடைப்பதில்லை.

ஆனால் இதற்கு ஐ.சி.சி. காரணம் இல் லை. இரண்டு நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் தொடர்களில் சம்பந்தப்பட்ட கிரிக்கெட்சபை கள் அட்டவணையை முடிபு செய்கின்றன.

# ஐ.பி.எல் ஏலத்தில் 12 பாகிஸ்தான் வீரர்கள்

மூன்றாவது இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) தொடருக்கான ஏலத்தில் 12 பாகிஸ்தான் வீரர்கள் கலந்து கொள்ள வுள்ளனர்.

ஐ.பி.எல் அமைப்பின் சார்பில் மூன்றாவது இருபது- 20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் மார்ச் 12ஆம் திகதி இந்தியாவில் ஆரம் பமாகிறது.

இத்தொடருக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் 17ஆம் திகதி நடக்கவுள்ளது. கடந்தமுறை வாய்ப்பை இழந்த பாகிஸ்தான் வீரர்கள் இந்த முறை இடம்பெறவுள்ளனர். முன்னதாக பாகிஸ்தான் கிரிக்கெட்சபை வீரர்களுக்கு அனுமதி வழங்கிவிட்டது.

ஐ.பி.எல் ஏலத்திற்கு விண்ணப்பிக்கும் நாள் நேற்று முன்தினத்துடன் முடிபடைந்து விட்டது. அதனையடுத்து அப்ரிடி, பவத் அலாம், அமீர், அப்துல்ரசாக், தான்வீர், மிஸ்பா உல்கக், கம்ரான் அக்மல், உமர் அக்மல், உள்ளிட்ட 12 வீரர்கள் ஏலத்தில் கலந்து கொள்ளவுள்ள தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் உதவி யின்றி நேரடியாக ஐ.பி.எல் தலைவர் லலித் மோடியிடம் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

# இருபது - 20 போட்டிகளால் பாக். கிரிக்கெட்டுக்கு ஆபத்து

## அணித்தலைவர் யூசுப் எச்சரிக்கை



இருபது- 20 போட்டிகளால் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் வீரர்களால் சரியாகச் சோபிக்க முடியவில்லை. இவ் வகைப் போட்டி களால் பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என முகமெட் யூசுப் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய- பாகிஸ்தான் அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி சமீபத்தில் மெல் போனில் நடந்தது. இப்பேட்டியில் துடுப்பாட்ட த்தில் சொதப்பிய பாகிஸ்தான் அணி 170 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதுகுறித்து பாகிஸ்தான் அணித்தலைவர் முகமது யூசுப் கூறியதாவது,

இருபது- 20 போட்டிகள் பணத்தை அடிப் படையாகக் கொண்டவை. இவ்வகைப் போட்டி களில் வீரர்கள் அதிரடியாக ஆடி ரன் குவிக்க வேண்டியுள்ளது. இதனால் நிலைத்து நின்று ஆடுவதையே வீரர்கள் மறந்து விட்டனர்.

மெல்போர்ன் டெஸ்டில் பாகிஸ்தானின் தோல்விக்கு இதுதான் காரணம். வீரர்கள் மட்டுமின்றி கிரிக்கெட் சபைகளும் பணத்தை மையமாகக் கொண்ட இருபது- 20 போட்டி களையே அதிகம் விரும்புகின்றன.

**ஆபத்து**

இதனால் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி களில் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிடும். சமீபத்தில் அபுதாபியில் நியூசிலாந்திற்கு எதி ரான ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் விளையாடுவதற்கு மிகவும் சிரமப்பட்டது.

ஒவ்வொரு வீரரும் அதிரடியாக ஆடவே முற்பட்டனர். இருபது-20 பேட்டிகளில் திறமையை வளர்க்க முடியாது. பாகிஸ்தான் வீரர்கள் இவ்வகைப் போட்டிகளில் சிறப்பாக ஆடுகின்றனர். இதன் பாதிப்பாக தற்காப்பு ஆட்டமே அவர்களுக்கு மறந்து போய்விட்டது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்கா உள்ளிட்ட அணிகள் குறைந்த அளவிலான போட்டிகளில்தான் விளையாடு கின்றன. இதனால் அந்த அணிகளால் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் சாதிக்க முடிகிறது. இவ்வாறு முகமெட் யூசுப் தெரிவித்தார்.

# முத்தரப்பு ஒருநாள் தொடர் பங்களாதேஷ் அணி அறிவிப்பு

முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்றவுள்ள பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் அணித் தலைவராக சகிப் அல் ஹசன் மீண்டும் தேர்வாகியுள்ளார்.

இந்தியா, பங்களாதேசம் மற்றும் இலங்கை பங்கேற்கும் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நாளை மறுநாள் 4ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இத்தொடருக்கான பங்களாதேஷ் அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. அணி யின் தலைவர் மொர்டசாவுக்கு ஏற்பட்டகாயம் குணமடை யாத நிலையில் சகிப் அல் ஹசன் மீண்டும் அணித் தலைவராக தேர்வுபெற்றுள்ளார். துணைத்தலைவராக முஷ்பிகர் ரஹீம் தேர்வாகியுள்ளார். அணி வருமாறு


சகிப் அல் ஹசன் (அணித்தலைவர்), முஷ்பிகர் ரஹீம் (துணைத்தலைவர்), முகமது அஷ்ரபுல், தமிம் இக்பால், ரகிபுல் ஹசன், ஸ்ரீயாத் நயீம், இஸ்லாம், அப்துல் ரஷாக், ஷாரியர் நபீஸ், சையத் ரசல், நஜ்முல் ஹுசன், ரூபெல் ஹுசைன், இம்ருல் காயஸ், அப்தாப் அகமெட் மற்றும் ஷபியுல் இஸ்லாம்.













முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினரும் அமைச்சருமான அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் 2ஆம் ஆண்டு நினைவாக சந்நிதியான் ஆச்சிரமத்தினால் அமைக்கப்பட்ட புதிய கட்டிடத் திறப்புவிழா நிகழ்வு களைப் படங்களில் காணலாம்.

## பயங்கரவாதம் தலை...

அவரது அறிக்கை வருமாறு,

பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப் பட்டதுடன் ஆயுதப் போராட்டமும் முடிவுக்கு வந்தது. எமது நாட்டில் பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்காமல் இருப்பதை உறுதிசெய்த தாயின் தமிழ் பேசும் மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு பின்வரும் காரணிகளை அடிப்படையாக் கொண்ட நிரந்தரத் தீர்வுத் திட்டம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

சகல இனத்தவர்களுக்கும் பாதுகாப்புடன் வாழக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டு மனிதப் பெறுமானங்களை மதிக்கின்ற இலங்கையர் என்றதனித்துவத்தை ஊக்குவித்தல்.

சகல இனத்தவர்களினதும் கலாசார புனிதத் தன்மையை பேணிப் பாதுகாத்தல், மதத்தைப் பின்பற்றல், மொழியைப் பேணிப்பாது காத்து வளர்ச்சியடையச் செய்து தம் தனித்துவத்தை மேம்படுத்துவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் வாய்ப் பளித்தல்.

சகல பிரஜைகளுக்கும் எதுவித பேதமுமின்றி சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் முழுமையாக மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளை அனுபவிக்கும் சுதந்திரம்.

தமது விருப்பத்தின் பிரகாரம் தான் விரும்பிய அரச கரும மொழியில் கருமமாற்றுவதற்கான உரிமை.

சகலரும் சமமாக மதிக்கப்படுவதை ஊக்குவித்தல்.

பௌத்த மதத் திற்கு முன்னுரிமை வழங் கும் அதே வேளை சகல பிரஜைகளுக்கும்தத் தமது மதங்களை சுதந்திரமாகவும், தடையின்றியும்பின்பற்றும்உரிமையை ஊக்குவித்தல்.

ஓர் இனத்தை அல்லது மதத்தை விடவும் கூடுதலான சலுகையை மற்றொரு மதத்திற்கோ அல் லது சமூகத்திற்கோ காட்டாதிருத்தல்.

ஓர் இனத்தை அல்லது மதத்தைவிடவும் கூடுதலான பொறுப்புகளை மற்றொரு இனத்திற்கோ அல்லது மதத்திற்கோ வழங்காதிருத்தல்.

புதிய நாடாளுமன்றத்தின் மூலம் இலங்கைவாழ் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய அரசியல் யாப்பு சட்டம் ஒன்றை சட்டமாக்கும்வரை நடைமுறையிலுள்ள அரசியல்யாப்புசட்டத்தை அமுல்படுத்தல்.

மாகாண மற்றும் அங்கு வாழும் இனங்களை நிலையான பன்முக ஜனநாயகத்தின் சாத்திற்கு பங்காளிகளாக்குவதனை ஊக்குவிப்பதனூடாக சகல பிரஜைகளுக்கும் மத்திய, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற மட்டத்தில் தேசத்திற்கு உயிரூட்டும் செயற்பாட்டில் முழுமையாக இணைந்து செயற்படுவதனை உறுதிப்படுத்தல்.

பிரிக்கப்படாத இலங்கைக்குள் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர்கள் ஆகிய சகல இனத்தவர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் முறை ஒன்றை ஏற்படுத்தல்.

போதியளவு நிதி மற்றும் நீதி அதிகாரம் உட்பட மாகாணத்தில் சுபீட்சம் மற்றும் நல்லாட்சிகளைக் கொண்டு நடத்துவதற்கும் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான பரவலான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குதல் என்றுள்ளது. (ச)

## ஜனாதிபதி வேட்பாளர்...

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனா ஆகியோர் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வதற்காக இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கின்றனர்.

யாழ். வரும் அவர்கள் முதலில் நல்லூருக்குச் சென்று சிறப்பு வழிபாட்டில் ஈடுபடுவதுடன் அங்கு மக்களுடன் சிறிது நேரம் கலந்துரையாடுவார்கள். அதன்பின் காரை நகருக்குச் செல்லும் அவர்கள் அங்கு காலை 10 மணிக்கு மகேஸ்வரன் ஞாபகார்த்த மண்டபத்தில் விசேட உரையாற்றுவார்.

அதன்பின்னர் யாழ். வரும் ஜெனரல் சரத் பொன்சேகா இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மக்களைச் சந்தித்து உரையாற்றவுள்ளார்.

அதற்கு முன்னதாக மானிப்பாய் வீதியிலுள்ள சரத் பொன்சேகாவின் கட்சி அலுவலகம் இன்று காலை பொன்சேகாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது. (ச)

# பொது குறிக்கோள் மாத்திரமே நாட்டுக்கு இன்று தேவையானது

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுக் குறிக்கோள் மாத்திரமே நாட் டிற்கு இன்று தேவையாக உள்ளதென ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

நாட்டின் நாளைய தினத்தை முன்னிட்டு இளைய தலைமுறையினருக்கு பாரிய பொறுப்புள்ளதாக ஜனாதிபதி குறிப்பிடுகின் றார்.

தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் கீழுள்ள தொழிற் பயிற்சி நிலை யங்களின் மாணவ, மாணவிகளை அலரி மாளிகையில் நேற்று மாலை சந்தித்த போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட அபிலா ஷைகளை நிறைவேற்றி கொள்வதற்குப் பதிலாக பொதுக் குறிக் கோள் மற்றும் இலக்குக ளின் பிரகாரம் நாட்டை நிர்வகிக்கின்ற பொறுப்பு இளைய தலைமுறையினருக்கு உள்ளதாக ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அரசின் வருமான மார்க்கத்தை இழக்க நேரிட்ட போதிலும் இளைய தலைமுறையினருக்காகவே போதைக்கு முற்றுப்புள்ளி போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தி யதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தோட்டத் தொழிலாளர்களை பிறிதொரு பிரிவினராக கருதி சமூகத்திலிரு ந்து தனிமைப் படுத்தி வைத்திருந்த யுகம் முடிபடைந்ததாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

அவர்களின் சகல தேவைகளையும் நிறை வேற்றுகின்ற வேலைத் திட்டமொன்றை அர சாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிடுகின்றார்.

இதேவேளை தோட்ட உத்தியோகத்தர்களை அலரிமாளிகையில் நேற்று முன்தினம் மாலை சந்தித்து உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

தோட்ட மக்கள் பிரதானமாக எதிர்நோக்கு கின்ற வீட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண் பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.

இதற்கென 6 இலட்சம் வீடுகளை நிர் மாணிக்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தவுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள சகல பிரஜைகளுக்கும் சகல குடும்பங்களுக்கும் வீடொன்று உரித்தாக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உன்னிப்பாக செயற்படுவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோட்ட உத்தியோகத்தர் மத்தியில் உரையாற்றினார். (ச-3)

## மலையக மக்கள் முன்னணி...

மலையகத்தில் பிரபல அரசியல்வாதியாக திகழ்ந்த அவர் பல்வேறு போராட்டங்களிலும் பங்கு பற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1957ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி பிறந்த சந்திரசேகரன் முதன் முதலாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மூலம் அரசியலுக்கு பிரவேசித்தார். இதற்கு முன்னர் அவர் வகித்து வந்த சமாதான நீதிவான் பதவியை அவரை சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்துக்கு கொண்டு சென்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து விலகிய அவர்மலையகமக்கள் முன்னணியை தோற்றுவித்து புளொட் அமைப்புடன் இணைந்து முதலாவது மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றரீர்.

இதன் பின்னர் நாடாளுமன்றத் துக்கு தெரிவான இவரின் ஆசனம் மூலமே 2001ஆம் ஆண்டு சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் அரசாங்கம் ஆட்சி அமைக்க கூடியதாக இருந் தது.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட் சிக்கு ஆதரவு வழங்கிவந்த அவர் தற்போது அரசாங்கத்தின் அமைச்சராக இருந்து வந்தார்.

இவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் சந்திரசேகரன் உலகளாவிய ரீதியில் தமிழ் தலைவராக மதிக்கப்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-3,5)

## உதவிகளை...

கையைச் சேர்ந்த 250பேரும் உள்ளடங்குவதாக சவுதி அரேபியா நாளேடு ஒன்று அண்மையில் செய்தி வெளியிட்டிருந் தது.

வழமையாக இந்த பாலத்தின் அடியில் வாழ்பவர்களை சவூதி அரேபிய அரசாங்கம் காலத்திற்கு காலம் கைது செய்து அவர்களது நாடுகளுக்கு நாடுகடத்தி வருகிறது.

அரசாங்கத்தின் செலவில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதனால் தமது சொந்த நாடுக ளுக்கு செல்ல விரும்புபவர்கள் இந்த பாலத் தின் அடியில் வாழ்வதாகவும் அப்துல் லஜித் முகமட் லாபீர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## தமிழ்த்தேசியக்...

தொடர்பிலான தகவல்களை உடனடியாக வெளியிடு வதில்லை என்று இரு தரப்பும் இணக்கம் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ் தேசிய கூட்டமைப்புடனான சந்திப்பு வெற்றியளித்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அறிவித்திருந்தார். (ச-5)

CISCO-CCNA
Network பயிற்சி
CISCO
உயர்சம்பளத்துடனான வேலைவாய்ப்பு.
அனைவரும் பயில்லாம்
(வரையறுக்கப்பட்ட பதிவுகள்)
0772 395 895
(C-4101)

புதிய நிர்வாகத்தில் நிரு கேம்பிரிச் புதிய பொலிவுடன்
அளவெட்டி
05/01/2010 ல் A/L 2012 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பமாகின்றன
❖ தரம் 1 முதல் O/L வரை சிறப்பான ஆசிரியர் குழுவுடன் புதிய பிரிவு ஜனவரி 5 ல்.
❖ தமிழ் மொழி–ஆங்கில மொழி மூலம்
❖ தரம் -5 விசேட வகுப்பு - ஆசிரியர் அன்பழகனின் பரீட்சைகள்
❖ நலன்புரி நிலையங்களிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம்.
❖ விசேட ஆங்கில–சிங்கள வகுப்பு ஆரம்பமாகின்றது
By:- பிரியதர்ஷன
(174)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses... மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள்
*MS Office *Accounting*MAYA(Graphics 3D)
*Printing & ICDL Typing,Hardware*English
*Web Designing* Video Editing *AutoCAD
* VB.net,LINUX,O/L ICT,A/L GIT,Kids Program
International Courses...
MCSE Spl_Network Security, CIMA, IELTS
Cisco-CCNA, ICDL-AutoCAD,BCS
Sun Java programmer,Red Hat Engineer
Degree Course-University of Colombo
* Diploma in -IT,Higer Diploma-IT,* Bachelor-IT
Free:Hardware,ICDL-AutoCAD,ICDL-International Computer Driving Licence,
50%Off:Java (Awarded by Sun)
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
324, பலாலி வீதி,யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில்,
MCS
Supported By UNDP/JRRP
(C-4102) 0772395895 Bus Route - 764

பொருளியல் புதிய பாடத்திட்டத்திற்கான புதிய வெளியீடு வெளிவந்து விட்டது
2011, 2012 மாணவர்களின் பரீட்சையை நோக்கியது
உயர்தரப் பொருளியல்
விலை 900/=
By:- S.S.சிறி B.Com(spl)
JANUARY 09 இல் இருந்து DMI ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம்
22 ஆம் திகதியிலிருந்து பின்வரும் புத்தகசாலைகளில் பெறலாம்
➤ பூபாலசிங்கம் புத்தகசாலை – கொழும்பு, யாழ்ப்பாணம்
➤ ஸ்ரீலங்கா புத்தகசாலை – யாழ்ப்பாணம்
➤ அன்னை புத்தகசாலை – யாழ்ப்பாணம்
➤ Happy Book Center – திருகோணமலை
(C-4099)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.